171
Regd. No. M. 2797. (விலை அணு ஒன்று.)



VARTHAGA OOLIAN.

Trichinopoly. | Monthly Journal of Commerce, Trade and Industry. | December 1933

மலர் 2.] திருச்சினுப்பள்ளி டிசம்பர்மீ-1933 [இதழ் 18

10 JUL 1951 MADRAS

"வர்த்தக ஊழியன்" வருட சந்தா.
உள்நாட்டிற்கு ரூ. 1. வெளி நாட்டிற்கு ரூ. 1—8—0

விளம்பர விகிதம்.
அங்குலம் ஒன்றுக்கு ரூ. 0—8—0.
பக்கம் ஒன்றுக்கு ரூ. 10—0—0.

முன்பணமில்லாத விளம்பரங்கள்
பிரசுரிக்க முடியாது. நீடித்தகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை.

நாணய மாற்றம் ...	141
சிறுமணிதிரள் ...	142
வர்த்தக சங்கங்கள் ...	143
சாமான்களுக்கு ரயில்வே சார்ஜ்கள்	144
S. I. Ry., Advisory Committee	146
Trade Secrets ...	148
Trade depression in India	149
Travancore Rubber Factory	149
Mysore Silk Industry ...	149
மதிப்புரைகள் ...	151
தான்ய நிலைமை ...	152
ராஜம் (கதை) ...	153
இந்திய வர்த்தகம் ...	158
வர்த்தக துணுக்குகள் ...	159
வர்த்தக குறி வழக்கு ...	160
அரிசி கட்டண குறைவு ...	161

"VARTHAGA OOLIAN"
Annual Subscription.
Inland Rs. 1—0—0. Foreign Rs. 1—8—0.

Advertisement Tariff.
One inch Rs. 0—8—0. One Page Rs. 10—0—0
Per Insertion.

Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.

HULLO! HULLO!!
HOW IS YOUR BUSINESS?
DON'T BE BROKEN HEARTED.
BROAD CAST YOUR BUSINESS.
MESSAGES THROUGH
"VARTHAGA OOLIAN"
AND PROSPER IN TRADE

Apply to:—

Manager, "Varthaga Oolian"
TRICHINOPOLY.

T.R. ரெங்கசாமிநாயுடு

வர்ணம் & கண்ணாடி வியாபாரம்,

341, 42, பெரியகடைவீதி, திருச்சினாப்பள்ளி.

எம்மிடம் பிரசித்திபெற்ற கம்பெனிகளின் நேர்த்தியான வார்னீஷ், வர்ணங்கள், முகம் பார்க்கும் நிலைக்கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகள், கலர் கண்ணாடிகள்.

ராஜா ரவிவர்மாவின் அழகிய சித்திரப்படங்கள், ஜெர்மன் & இங்கிலீஷ் லேடி & சீனரி படங்கள், போஸ்டு கார்டு படங்கள், படங்களுக்கு வேண்டிய சட்டம் கண்ணாடிகள் கால் அங்குல வெளிச்ச கண்ணாடிகள் அட்டை, டின் பிளேட் வகைகள்.

திருவிழாக்களுக்கு வேண்டிய கலர் காகிதங்கள், வர்த்தி தகடுகள், கண்ணாடி மணி தினுசுகள், அசல் தங்கம் & வெள்ளி ரேக்குகள் முதலியவைகள் விலை சரசமாயும் நயமானதாயும் கிடைக்கும்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

கிறிஸ்துமஸ் கார்கேள், புதுவருட காலண்டர்கள் கிடைக்கும்.

இனாம்! இனாம்!!

என் அனுபவசாஸ்திரீய

தேகாப்பியாச முறை

இது எல்லோருக்கும் இனாமாக அளிக்கப்படும்.



இப்புத்தகத்தில் தேகாப்பியாச முறையைப்பற்றி நன்ருக விவரித்து எழுதப்பட்டிருக்கின்றது. இது தவிர என்னுடையதும் மற்றும் என்னுடைய சிஷ்யர்களுடையதுமான அநேக புகைப்படங்கள் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கின்றன. எவன் தன் தேகத்தை அபிவிருத்தி செய்து ஆரோக்கியமாக இருக்க விரும்புகிருனே அவன் இப்புத்தகத்தை வாசிக்க வேண்டும்.

தபால் சார்ஜுக்காக இரண்டு அணு இந்திய போஸ்டல் ஸ்டாம்பு அனுப்பவும்.

பிரபோசர்: **எம். வி. கிருஷ்ணராவ்,**

உதகமண்டலம், (நீலகிரி.)

"நாணயம் நனி பேண்"

"வர்த்தக ஊழியன்"

திருச்சினுப்பள்ளி
1933-ஞு டிசம்பர்-மீ

நாணய மாற்றம்.
(Currency)

நாணயமாற்றம் ஒரு தேசத்தின் செல்வநிலையின் ஜீவநாடி என்று சொல்லவேண்டும். ஒரு தேசத்தின் கைத்தொழில் அபிவிருத்திக்கும், விலைவாசிகள் உயர்வதற்கும், இந்த நாணயமாற்றத்தையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றார்கள். இவ்விஷயம் மிகவும் சிக்கலானது. ஆழ்ந்து கவனித்து அனுபவமும் பெற்றவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு சுலபத்தில் விளங்காது. மேலும் இந்திய போது ஜனங்களுக்கு இதைப் பற்றி அறியும் ஆற்றலும் கவலையும் இல்லாமலே நீண்டகாலமாக இருந்துவருகிறதென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இந்த அறியாமையால் இந்தியா அடைந்திருக்கும் நஷ்டத்திற்கு அளவேயில்லை. ஆயினும் நாணயமாற்றத்தால் இந்தியா அடைந்துவரும் நஷ்டத்தை பொது ஜனங்களும் எளிதில் தெரிந்துகொள்ளும் நோக்கத்துடன் இந்தியாவின் பல பாகங்களில் நாணயமாற்று சங்கங்கள் நிறுவிவருகின்றார்கள். போதிய ஆதரவு சங்கங்களுக்கு இருந்துவருகின்றன. பொது ஜனங்களுக்கும் நன்கு தெரியும்படியாக இந்த சங்கங்கள் பிரசாரம் செய்ய கடமைப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலோ ரூபாயை பிரிட்டிஷ் நாணயமாகிய ஸ்டர்லிங்குடன் இணைத்து ரூபாய்க்கு 18 பென்சு என்று ஏற்படுத்தியதால் இந்தியா இதுவரையில் அடைந்திருக்கும் நஷ்டத்தை ஆலோசித்துப்பார்ப்பவர்களுக்கு இதன் உண்மை விளங்கும். இனியும் இது நீடிக்குமானால் தேச பொருளாதாரம் பெரிதும் சீர்கேடடையும். நாணயமாற்று விகிதம் அதிகமாகயிருந்தால் தேசீய நன்மைக்கும் பெரிதும் பாதகமேற்படுமென்பதை வெகு காலமாக ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது. தற்போதைய வர்த்தக மந்தத்திற்கும் இவ்வித நாணய மாற்று விகிதம் முக்கிய காரணமாகும். நாணய மதிப்பு குறைந்தால் விளைபொருள்களின் விலைவாசியும் அதிகப்பட சாதகமாகயிருக்கும். இந்தியா சுபீட்சமாகவும், க்ஷேமமாகவுமிருந்தால் பிரிட்டிஷ் வர்த்தகமும் இங்கு அபிவிருத்தியடைய வகை ஏற்படும். **1890**ம் வருடமுதல் பல கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. அவைகள் இந்திய செலாவணியை பரிசீலனை செய்தன. இந்தியாவுக்கு நன்மைக்கான சிபார்சுகளை புறக்கணித்தும் இதரர்களுக்கு சாதகமான சிபார்சுகளை சர்க்கார் ஊர்ஜிதம்செய்தும் வந்திருக்கிறார்கள். இந்தியாவின் விவசாயிகள் கைத்தொழில்காரர்கள் முதலியோர்களின் நன்மை 18 பென்சு விகிதத்தால் பாதகமடைந்துள்ளது. நாணயமாற்று விகிதத்தை மாற்றுவதால் தேசத்தின் நாணயம் பாதிக்கப்படமாட்டாது. இதர தேசங்களைப்போல் நமக்கும் நமது செலாவணி முறையை நிர்ணயித்துக்கொள்ள உரிமை இருக்கவேண்டும். இந்தியாவிலுள்ள ஆங்கிலேய வர்த்தகர்களும் ஒரேவித அபிப்பிராயங் கொண்டிருக்கின்றார்கள். நேர்மையான நாணயவிகிதம் தேசத்திலுள்ள சகல அம்சத்தினருக்கும் முக்கியமானது. உலகப் பொருளாதார மகாநாட்டில் நாணயமாற்றத்திற்கு அமெரிக்கா கட்டுப்பட மறுத்து விலைபொருள்களின் விலைகளை ஏற்றுவதற்காக டாலரின் மதிப்பை குறைத்தது. ஜப்பானும் அதேபோல் யென்னின் மதிப்பைக் குறைத்தது. இந்தியாவின் நன்மைக்கும் ரூபாயின் மதிப்பை இவ்விதம் குறைத்துக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்குமாகில் அவ்விதம் செய்ய ரூபாயை தனியாக விட்டு விடுவதுதான் நியாயமாகும். ரிசர்வ் பாங்கு மசோதாவில் நாணயமாற்றுவிகிதம் குறைக்கப்பட வேண்டுமென்று கமிட்டியால் வாதாடப்பட்டும் இரண்டு அதிகப்படியான வோட்டுகளால் தள்ளிவிடப்பட்டிருப்பதானது வருந்தத்தக்க செய்கையாகும். கமிட்டியில் அங்கத்தினராகயிருந்த சர் ஹோமிமேத்தா என்பவர் கரேன்சிலீக் கூட்டத்தில் நாணய மாற்றுவிகிதத்தை மாற்றவேண்டுமென்று பேசிவிட்டு கமிட்டி கூட்டத்தில் எதிரிடையாக வோட் செய்திருப்பது வருந்தத்தக்க விஷயம். இருந்தபோதிலும் இந்திய சட்ட சபையில் மீண்டும் விவாதிக்கையில் அங்கத்தினர்கள் ஏகோபித்த அபிப்பிராயத்துடன் கண்ணியமாக நடந்துகொள்வார்களென்று எதிர்பார்க்கிறோம். ரிசர்வ் பாங்கு மசோதாவை பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட கூட்டுக்கமிட்டி வெளியிட்ட அறிக்கையை ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளும்படி இந்திய சட்ட சபையில் சர். ஜார்ஜ் ஷுஸ்டர் பிரேரேபிக்கையில் இந்த மசோதாவுக்கும் நாணயமாற்றத்துக்கும் சம்மந்தமில்லையென்றும், இந்த மசோதா மூலமாக நாணயமாற்று நிலைமையை மாற்ற முயற்சி செய்யப்படுமென்று தெரிந்திருந்தால் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிராதென்றும், சட்டபூர்வமான ஆதரவு அதற்கு ஏற்கனவே யிருக்கிறதென்றும், அதை மீண்டும் வற்புறுத்த இஷ்டமில்லையென்றும் சொல்லியிருப்பதை நன்கு கவனிக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறோம்.

சிறுமணித்திரள்.

(Editorial Notes.)

அழுதபிள்ளை பால் குடிக்கும்-

சென்ற வருடம் சைகோனில் வர்த்தக சம்மந்தமாக சென்று வியாபாரம் செய்துகொண்டிருந்த தனவைசிய சமூகத்தைச்சேர்ந்த நால்வர்களை தேசபிரஷ்டம் செய்தார்கள். உடனே பெருங்கிளர்ச்சி செய்யப்பட்டதின் காரணமாக அந்த உத்திரவு ரத்து செய்யப்பட்டதை கேழ்க்க மிகுந்த திருப்தியை கொடுக்கிறது. கடன் விஷயத்தில் எவ்விதமான முடிவு செய்தார்களென்ற விபரம் தெரியவில்லை. அதுவும் சாதகமாக முடிந்திருக்குமென்று நம்புகிறோம்.

பரிகாரம் கிடையாதா?

லண்டனுக்கும் அமெரிக்காவுக்கும் தந்திமூலமாக தினம் டாலர் விலையை நிர்ணயம் செய்து வர்த்தகர்கள் விலையை சரிசெய்துகொள்வார்கள். ஸ்டர்லிங் பவுன் ஒன்றுக்கு சாஸ்வதமாக ஏற்பட்டது $4{\cdot}86\frac{3}{4}$ டாலர். ஆனால் அமெரிக்கா தங்கத்தை அபரிமிதமாக வாங்கவேண்டுமென்று விலையை கைவிட்டபின் $5{\cdot}48\frac{1}{4}$ வரையில் சென்று இப்பொழுது 5·20 விதம் விலையிலிருக்கிறது. லங்காஷர் ஆலைகள் டாலர் விலை மதிப்பு குறைந்துவிட்டதால் இந்திய பருத்திக்கு ஆர்டர்களை கொடுக்காமல், அமெரிக்காவில் ஏராளமான பருத்தியை வாங்க ஆர்டர் கொடுத்திருப்பதாக தகவல் எட்டியிருக்கின்றது. நீடித்திருந்தால் இந்தியாவில் வர்த்தக மந்தம் அதிகப்படும். இந்திய விவசாயிகள் மேலும் மேலும் கஷ்டப்பட நேரிடும். இங்கிலாந்தில் பிரசுரமாகும் நியூ ஸ்டேட்ஸ்மென் பத்திரிகை டாலர் சம்மந்தமாக கண்டித்தெழுதியிருப்பதுடன் உடனே அமெரிக்காவுக்கு சென்று பிரசிடெண்டுடன் கலந்தாலோசிக்க வேண்டுமென்று தெரிவிக்கிறது. இந்தியாவில் இதற்கு யாதொரு பரிகாரமும் கிடையாதா?

அதிக ஆசை அதிக நஷ்டம்.

இப்பொழுது கிரோசின் எண்ணைக்கு வரி விதிப்பதுபோல் மோட்டார் எண்ணைகளைத்தவிர மற்றும் நிலத்திலிருந்து எடுக்கப்படும் எண்ணைகளுக்கு வரி விதிக்கப்படும் நோக்கத்தோடு, இந்திய சட்டசபையில் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. கிரோசின் எண்ணைக்கு பதிலாக ஒரு சாதாரண விளக்கில் மேற்படி எண்ணைகளை ஊற்றி எறியவிட்டால் குறைந்தபட்சம் வெளிச்சம் கொடுக்கும் எண்ணைகளே மேற்படி திருத்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த திருத்தம் நிறைவேறினால் கவர்ன்மெண்டுக்கு அதிகமாக வருமானம் கிடைக்குமென்று நம்புகிறார்கள். அமுலுக்கு வந்தபிறகு கவனித்துப் பார்த்தால் எதிர்பார்த்த வருமானம் கிடைத்ததாயென்று தெரியும்.

இனி தாங்கமுடியாது.

நிலவரி குறைக்கவேண்டியதின் அவசியத்தைப்பற்றி சென்னை சட்ட சபையில் பிரதிநிதிகளால் எடுத்துச் சொல்லியும் செவி சாய்க்காததின்மேல், பொது ஜனங்களே சென்ற மாதம் 26உவை நிலவரி கிளர்ச்சி தினமாகக்கொண்டு, சென்னை மாகாணத்தில் எல்லா இடங்களிலும் கூட்டங்கள்கூடி நிலவரியை குறைக்கவேண்டுமென்று தீர்மானங்கள் செய்திருப்பதிலிருந்தாகிலும், நிலவரி பளுவை இனி தாங்கமாட்டார்களென்று கவர்ன்மெண்டார் அறிந்துகொண்டிருப்பார்களென்று நம்புகிறோம். இம்மாதப்முதலே நிலவரியை வாங்க ஆரம்பித்துவிடுவார்களானபடியினால் கவர்ன்மெண்டார் உடனே வரியை குறைத்து வசூல் செய்யும்படி உத்திரவிடும்படியாக கேட்டுக்கொள்ளுகிறோம்.

திருவனந்தபுரத்துக்கு ஜே

திருவனந்தபுரத்து அரசாங்கத்தார் தங்களுடைய நாட்டில் விளையும் ரப்பரை வெளியூர்களுக்கு அனுப்பாமல் தாங்களே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி கெட்டியான ரப்பர் டைர்கள் சைகிளுக்கும் மோடார்களுக்கும் உள்ளுக்கு போடும் ரப்பர் குழாய்கள், ரப்பர் பொம்மைகள், ரசாயனசாலைக்கு வேண்டிய ரப்பர் குழாய்கள், ரப்பர் பூசிய சாமான்கள் முதலான ரப்பர் சம்மந்தமான சாமான்கள் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளப் போகின்றார்கள். சமீபத்தில் திருவனந்தபுரம் அரசாங்கம் ரப்பர் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு சாங்ஷன் செய்திருப்பதை நாம் ஆதரிப்பதோடும் மற்ற அரசாங்கங்களும் இதே போல் அபிவிருத்திக்கான காரியங்களை செய்யுமென்று எதிர்பார்க்கிறோம்.

சர்க்கரை தொழில்

பொது ஜனங்களுக்கு சர்க்கரை ஒரு முக்கியமான ஆகார சாமான். இந்த வஸ்துவை இந்தியாவில் அபரிமிதமாக உற்பத்தி செய்ய கவர்ன்மெண்டாரும், பொது ஜனங்களும் போதிய சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. அன்னிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு 1932-33ம் வருடத்தில் 3,69,381 டன், 1931-32ம் வருடத்தில் 5,15,266 டன் சர்க்கரை இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. இதன் மேல் பொது ஜனங்கள் கிளர்ச்சி செய்ததின் காரணமாக விவசாய ஆராய்ச்சி கவுன்சிலிடம் கவர்ன்மெண்டார் 30 லட்ச ரூபாய் கொடுப்பதாகவும் சர்க்கரை தொழிலை விருத்திசெய்ய வழிகளைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் மேல் கோயம்புத்தூரில் கூடிய விவசாய ஆராய்ச்சி கவுன்சிலின் சர்க்கரை கமிட்டியார் கான்பூரிலிருக்கும் பட்லர் ரிசர்ச் இன்ஸ்டிடூட்டை

இந்த கமிட்டியார் ஒப்புக்கொண்டு சர்க்கரை தொழிலை அபிவிருத்தி செய்ய தீர்மானம் செய்திருக்கின்றார்கள். சர்க்கரை தொழிற்சாலைகளும் இந்தியாவில் பல பாகங்களில் ஏற்படுத்தி சர்க்கரை உற்பத்தி செய்கின்றார்கள். கமிட்டியார் பரிசீலனையினால் இந்தியாவுக்கு நன்மை ஏற்படுமென்று நம்புகிறோம்.

இப்படியுமிருக்குமா ?

நவம்பர் மாதம் 25உ பம்பாயிலிருந்து இங்கிலாந்துக்கு சென்ற கப்பலில் 49,39,101 ரூபாய் மதிப்புள்ள தங்கம் அனுப்பப்பட்டிருக்கிறது. இங்கிலாந்து தங்கசெலாவணியை விட்டதிலிருந்து இந்த தேதி வரையில் 1,50,33,88,833 ரூபாய் மதிப்புள்ள தங்கம் வெளியேறியிருக்கிறது. ஆனால் இங்கிலாந்தில் முதல் முதலாக ஒரு இந்திய வியாபாரி சுமார் 1,33,000 ரூபாய் (பதினாயிரம் பவுன்) மதிப்புள்ள தங்கத்தை வாங்கி நவம்பர் மாதம் 24உ கப்பலில் ஏற்றி இந்தியாவுக்கு அனுப்பியிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது. இது உண்மையாக யிருக்குமா? அப்படியிருந்தால் அந்த வியாபாரியின் மனப்பான்மைதான் என்ன?

சொந்த விளக்கானாலும் சுடும்.

ஜப்பானிலிருந்து அரிசி இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருப்பதாயும், இந்தியாவில் ஏராளமான அரிசி தேங்கிக்கிடக்கையில் ஜப்பான் அரிசியை தடுக்காமல் இருப்பதைப்பற்றியும், இந்திபா சட்டசபையிலும் சென்னை சட்டசபையிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. இதன்மேல் இந்திய கவர்ன்மெண்டார் விசாரணை செய்ததில் இந்தியாவிலிருந்து ஜப்பானுக்கு அனுப்பப்பட்ட அரிசியே திரும்பி இந்தியாவுக்கு அனுப்பியதாயும், ஜப்பான் அரிசி அல்லவென்றும் தெரிந்துகொண்டதாக அறிகிறோம். நெற்றிக்கண்ணை திறந்தாலும் குற்றம் குற்றமே என்று சொன்னதை அனுசரித்து இந்தியா அரிசியாகயிருந்தாலும் சரி, இந்தியாவுக்குள் வேறு எந்த தேசத்திலிருந்தும், அரிசி இறக்குமதி செய்யக்கூடாதென்று கண்டிப்பாய் உத்திரவிட்டாலல்லாது இந்தியாவிலிருக்கும் அரிசிக்கு விமோசனம் ஏற்படாதாகையினால் பிறதேசங்களிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதை பலமாகக் கண்டிக்கிறோம்.

வர்த்தக சங்கங்கள்.
(Chamber of Commerce)

திருச்சி ஜில்லா தமிழ வியாபாரிகள்சங்கம்.

சங்கத்தின் 17-வது நிர்வாக சபைக் கூட்டம் 4—11—33 மாலை 7 மணிக்கு சங்கக் சட்டிடத்தில் சங்கத்தலைவர் திருவாளர் பெ. அந்தோனியா பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறப்பெற்றது.

(1) வர்த்தக மந்தத்தினால் வருந்துகின்ற வியாபாரிகளுக்கு 1000 ரூபாய் வருமானம் கிடைத்தாலும் வரி விதிக்க வேண்டும் என்ற சட்டம் மிகவும் கஷ்டத்தை உண்டுபண்ணி வருகிறதினால் அதை ரத்து செய்ய வேண்டுமென்று இந்தியா சட்டசபை, சென்னை சட்டசபை உறுப்பினர்களையும் அரசாங்கத்தையுப் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

(2) வருமானவரி விதிப்பதுடன் (penalty) பெனல்டி வரி என்று ரூ. 1-0-0க்கு நான்கு அணா வீதம் சேர்த்து விதித்து வசூலிப்பதை நிறுத்திவிடவேண்டுமென இச்சங்கம் அரசாங்கத்தையும் சட்டசபை உறுப்பினர்களையும் வேண்டிக்கொள்கிறது.

(3) ஜெனரல் மார்க்கட்டை புதுப்பிக்கப்படும் காலமும், புதுப்பிக்கப்படப் போகின்ற முதல் பிரிவு எது? என்பதும் அவ்விடங்களில் வியாபாரத்தை நடத்திக்கொண்டு வருபவர்களுக்கு கொடுக்கப்போகின்ற மாற்று இடம் எது? என்பதும் அறிந்துகொள்ள நமது சங்கம் விரும்புவதினால் முனிசிபல் கமீஷனர் அவர்களை வெகு விரைவில் தெரிவிக்கவேண்டுமென இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

(4) திருச்சி ஜெனரல் மார்க்கட்டை . கன்ட்ராக்ட் விடுகிற பழைய வழக்கத்தை கைக்கொள்ளாமல் கடந்த இரண்டு வருடங்களைப்போலவே வருகிற வருடங்களிலும் முனிசிபாலிட்டியின் நேரான நிர்வாகத்தில் நடைபெறுவது நலம்பயக்கும் என்பதை இச்சங்கம் கனம் சேர்மன்அவர்களுக்கும் கமிஷனர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறது.

(5) இச்சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாவை 1934ளூ ஜனவரி மாதம் முதலில் நடத்தவேண்டுமென்றும் ஷ விழாவின் தலைமை ஸ்தானத்திற்கு கனம் சேர்மன் அவர்களை தருவிப்பதென்றும், அதுபொழுது சங்கத்தின் புதிய உத்தியோகஸ்தர்களை தேர்ந்தெடுப்பதென்றும், சங்க வரவு செலவு கணக்குகளை தனிக்கை செய்து, அச்சிட்டு எல்லர் உறுப்பினர்களுக்கும் வழங்கவேண்டுமெனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

* * *

தஞ்சை தென்னாற்காடு ஜில்லா மில் சொந்தக்காரர்கள் சங்கத்தின் காரியதரிசி திரு. கே. ராமஸ்வாமி ஐயர் ஓர் விஞ்ஞாபனத்தைச் சிலோன் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பியிருக்கிறதாக தெரிகிறது. அரிசி ஏற்றுமதியில் விதிக்கப்படும் விகிதத்தை இன்னும் குறைக்கும்படி (கொழும்புகாலி)யும், தஞ்சை தென்னாற்காடு ஜில்லாக்களில் உள்ள எந்த ஸ்டேஷன்களினின்று ஏற்றுமதி செய்தாலும் விகிதத்தில் குறைவு செய்யவேண்டும் என்றும் சென்ற செப்டம்பர் மாதம் 20-ம் தேதி சென்னையில் நடந்த விசாரணையில் ஒப்புக்கொள்ளப்பட்டபடி செய்யவேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்படி விக்ஞாபனப் பத்திரம் சென்னை கவர்ன்மெண்டார் மூலமாக சிலோன் கவர்ன்மெண்டாருக்கு அனுப்புவதாயும் தெரியவருகிறது.

* * *

சென்னை தென்னிந்தியா வியாபாரச் சங்க கவுரவக் காரியதரிசி இந்தியா கவர்ன்மெண்டு பொக்கிஷ இலாகாவுக்கு அனுப்பியுள்ள ஒருதந்தியில்ரிசர்வ்பாங்கு மசோதா மூலம் 18 பென்ஸ் பரிவர்த்தனை விகிதத்தை நிரந்தரமாக்க முயற்சிப்பதைக் கண்டிப்பதாகவும், ரூபாயின் மதிப்பை குறைக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் பரிவர்த்தனை விகிதத்தைப் பற்றிப் பூராவாகப் பரிசீலனை செய்ய இப்போது சமயம் வாய்த்திருப்பதாக கமிட்டி கருதுவதாகவும், ஆகவே இந்த சமயத்தில் ரூபாயின் மதிப்பைக் குறைத்து விவசாயிகள் வியாபாரிகள் கைத்தொழிற்காரர்கள் ஆகியவர்களின் நன்மையை நாடிப் பரிவர்த்தனை விகிதத்தை நிர்ணயிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள். (RAILWAY RATES)

(The Railway do not accept responsibility for the correctness of these quotations a reference should be made to the Local Rate Advices & Foreign Rate Circulars issued by the S. I. Ry.)

சாமான்கள்	எங்கிருந்து	எந்த இடத்துக்கு	ரேட்டு மணங்குக்கு		எந்ததேதியி லிருந்து	ஷரா
			அ.	பை.		
தேக்கு	அங்காடிபுரம்	பாலக்காடு	2	4	15—11—33	
,,	மெலட்டூர்	,,	2	4	,,	
,,	நிலாம்பூர்ரோடு	ஒலவக்கோடு	2	9	,,	
,,	வாணியம்பலம்	,,	2	6	,,	
காய்கறிகள்	மேட்டுபாளையம்	குன்னூர்	3	0	1—10—33	
,,	,,	உதகமண்டலம்	4	0	,,	
,,	,,	வெல்லிங்டன்	3	3	,,	
தேக்கு	கல்லாயி	காட்பாடி	6	7	1—11—33	
,,	,,	ராணிப்பேட்டை	6	7	,,	
,,	ஒலவக்கோடு	காட்பாடி	6	7	,,	
,,	,,	ராணிப்பேட்டை	6	7	,,	
நெருப்புப்பெட்டி	அங்காடிபுரம்	சாத்தூர்	6	3	20—10-33	
,, [பலகை	ஒட்டபாலம்	,,	5	10	,,	
,,	பாலக்காடு	,,	5	4	,,	
,,	பட்டாம்பி	,,	6	1	,,	
,,	,,	ஒட்டபாலம்	1	0	,,	
பாலஸ்டு	திருச்சி கூடீஸ்	காரைக்கால்	1	9	25—10—33	
தேங்காய்	படகாரா	தாலிபரம்பாரோடு	1	5	16—10—33	
,,	கள்ளிக் கோட்டை	,,	1	10	,,	
அரிசி	ஈரோடு	திருப்பூர்	1	3	,,	
நார்	ஷோரனூர்	திருவனந்தபுரம்	12	0	5—11—33	
விறகு	கடலண்டி	திருச்சிகோட்டை	3	6	10—11—33	
,,	,,	திருச்சிகூடீஸ்	3	6	,,	
நெல்	சிதம்பரம்	திருவனந்தபுரம்	7	3	4—11—33	
வைக்கோல்	,,	சென்னை பீச்	3	6	15—11—33	
நிலக்கடலை	கரூர்	கூடலூர்ஜங்	8	4	1—11—33	
உருளைக்கிழங்கு	குன்னூர்	மேட்டுப்பாளையம்	1	9	15—11—33	
உப்பு	வண்டலூர்	அரக்கோணம்	1	6	10—11—33	} 9—11—34 வரையில்.
,,	,,	காஞ்சீபுரம்	1	1	,,	
,,	அகஸ்தியம்பள்ளி	ஆத்தூர்	5	5	15—11—33	
,,	,,	சின்னசேலம்	5	5	,,	
,,	,,	கோயம்புத்தூர்	5	11	,,	
,,	,,	தாசம்பட்டி	6	1	,,	
,,	,,	திண்டுக்கல்	5	5	,,	
,,	,,	தொட்டம்பட்டி	6	1	,,	
,,	,,	ஹோசூர்	6	7	,,	
,,	,,	ஜோலார்ப்பேட்டை	6	1	,,	
,,	,,	காரைமடை	6	1	,,	
,,	,,	கேலமங்கலம்	6	6	,,	
,,	,,	கொடுமுடி	5	6	,,	
,,	,,	மதத்துகுளம்	5	5	,,	
,,	,,	மானமதுரை	5	5	,,	
,,	,,	ஒட்டன் சத்திரம்	5	5	,,	
,,	,,	பாலக்காடு	6	0	,,	
,,	,,	பல்லாவரம்	5	5	,,	
,,	,,	பழனி	5	5	,,	
,,	,,	பெண்ணாடம்	5	5	,,	
சர்க்கரை	கள்ளிக்கோட்டை	மங்களூர்	3	6	1—11—33	
,,	நெல்லிகுப்பம்	திரூர்	9	3	10—11—33	
கரும்பு	கிள்ளை	நெல்லிகுப்பம்	0	10	1—11—33	
,,	ஒலக்கூர்	,,	1	3	,,	

N. MOHAMED ALLY & Co.,

Medical Hall, Porto-Novo P. O.,

S. A. District, India.

கனதனவான்களே முக்கியம்! கவனியுங்கள்!! ஒரே வேளையில் குணந்தெரியும்!!!

— மெடல்பெற்ற —

சிட்டுக்குருவி கிருத லேகியம்.

அறிவிற் சிறந்த நண்பர்களே! சற்று கவனியுங்கள்!

இந்த லேகியபாகம் மற்ருேர் செய்துகொடுத்தால் ரூ. 2000 இனும்.

லேகியத்தின் சிரேஷ்ட குணம்.

நண்பிற்குகந்த அன்பர்காள்! அருமையும், பெருமையும், பேரும் கீர்த்தியும் பெற்று இந்த அற்புத குணந் தங்கிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் தங்கள் வாழ்நாளிலே சுகாநந்த இன்பத்தையடைவர். ஆ! ஹா! குணத்தால் சிறந்ததிதுதான் என்று பன்முறையும் புகழ்வர் என்று சிட்டுக்குருவியின் குணத்தைப்பற்றி சிந்தாமணி என்னும் சாஸ்திரத்தில் சித்புருஷரின் உத்தமவாக்கியமும் எற்பட்டிருக்கிறது. ஆகவே பலகாலும் பலபேருக்குக்கொடுத்து யாம்கண்ட உபயோகத்தையும் சொல்லுகின்ருேம். (லேகியத்தின் குணமாவன) வாதபித்த சிலேத்ம மிகுதிக்குறைவால் எற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச் சூடு, இந்தரீயம் ஜலம்போல் நீற்று ஸ்திரீபோகத்திலும், தூக்கத்திலும் அதிகமாய் வெளிப்படல், மனவாழ்க்கையில் சீக்கிரம் வெளியாகி விடுதல், வீரிய நஷ்டம், நரம்புத் தளர்ச்சி, ஆண்குறி சிறுத்தல், சதா இடுப்புவலி, ரோகம், பார்ச வாய்வு, நெஞ்சுவலி, விரைவாதம், கைகால் அசதி, மயக்கம், மறதி, ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல், முதலியன நிவர்த்தியாகி விடும். தேக உஷ்ணத்தைச் சமனப்படுத்தி இரத்தத்தை விருத்திசெய்து நரம்புகளில் ஓடச்செய்து சப்த தாதுக்களை வலுப்படுத்தி நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்தி ஆண் தத்துவத்தை விர்த்திசெய்து, புத்தி சாதுர்யத்தைக்கொடுத்து போகஞ்செய்ய தத்துவமிழந்த கிழவர்களையும் பால்ய பருவ ஆண் சிங்கமாக்கிவைக்கும். போககாலத்தில் ஸ்திரீ புருஷர்களுக்குள் மிகுந்த இன்பத்துடன் நெடுநேரம் வரையும் நாதத்தைக்கட்டும். ஸ்திரீ சம்பன்னராய் வாழும் புருஷர்களுக்குப் பால்ய பருவ துர்ச்செய்கைகளால் நடுப்பிராயத்தில் எற்படும் தாது நஷ்டத்தை மறுபடியும் உண்டாக்குவதற்கு இதைவிட மருந்து வேறில்லை. சுத்தமாக ஆண்தன்மை யற்றுப்போன கிழவர்களையும் இந்த லேகியம் இல்லற இன்பத்தையனுபவிக்கும்படி செய்திருக்கிறது. லேகியம் சாப்பிடும் விபரம் நோட்டீஸ் மருந்துடன் அனுப்பப்படும். அதில் கண்டபடி சாப்பிட்டு இந்த லேகியத்தின் குணத்தைப்பற்றி தங்களின் சிநேகிதர்களிடம் தெரிவித்து நமக்கு ஆர்டர் செய்யும்படி செய்யவும்.

ஓர் நூதன இன்பம் இதிலமைந்திருப்பது மஹா ஆச்சரியமாகவிருக்கிறது. கனதனவான்களே! நீங்கள் இதுவரையில் எத்தனையோவித லேகியங்கள் சாப்பிட்டு இருப்பீர்கள். ஆனல் இந்த லேகியத்தில் அமைந்திருக்கும் குணங்களைப்போலுள்ள லேகியத்தை இதுவரையில் சாப்பிட்டிருக்கமாட்டீர்கள். ஒருதடவை பரீக்ஷை செய்து பாருங்கள்.

40 நாள் **80** வேளை **16** பலம் டப்பி ரூ. **12 -0-0**	**8** நாள் **16** வேளை **2** பலம் டப்பி ரூ. **1 -4-0**
20 நாள் **40** வேளை **8** பலம் டப்பி ரூ. **6 -8-0**	**4** நாள் **8** வேளை **1** பலம் டப்பி ரூ **0-10-0**
12 நாள் **24** வேளை **5** பலம் டப்பி ரூ. **3 -8-0**	வி. பி. சிலவு வேறு.

☞ பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரா முதலிய பிரதேச வாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால் சார்ஜ் ரூ 2-8-0யும் சேர்த்து முன் பணம் அனுப்பிமருந்து பெறவேண்டும். மேற்படி ஊரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங்கடிதங்களை அங்கீகரிக்கப்படமாட்டாது. தங்கள் விலாசம்தெளிவாய் எழுதவும் பல ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை தக்க கமிஷன் கொடுக்கப்படும். தங்கள் விலாசம் எழுதினல் கியாட்லாக் இனமாக அனுப்பப்படும். ஆர்டர் செய்யும்போது இந்த பேப்பரில் கண்டதாக பேப்பர் பெயரையும் எழுதவும்.

☞ எமது விலாசம்:—
என். முகம்மது அல்லி அன் கோ,
மெடிகல் ஹால்,
பரங்கிப்பேட்டை தென்னுற்காஜேல்லா(இந்தியா)

☞ எமது போதக்குடி ஏஜண்டு:—
T. N முகம்மது சுல்தான் ராவுத்தர்,
சுருட்டு வியாபாரம்,
போதக்குடி P. O. தஞ்சாவூர் ஜில்லா.

☞ எமது ரங்கூன் ஏஜண்டு:—
M. முகியதீன் பிள்ளை,
84-நீர் கடை,
27-நீர் கல்லி, ரேங்கூன்.

☞ எமது ஈப்போ ஏஜண்டு:—
வா. இ. முகம்மது இபுராஹீம்,
நெ. 29, பங்கிளிமா லேன்,
ஈப்போ P. O., F. M. S.

S. I. RY. ADVISORY COMMITTEE.

The South Indian Railway Local Advisory Committee, which was reconstituted last month, met at Madras Egmore on the 18th November, under the presidency of Sir Percy Rothera, Agent. The following summary of the proceedings is sent to us for publication:—

Train Services.

The Committee suggested that shuttle train No. 285 running between Madura and Manamadurai be started from Madura at 18-30 hrs. instead of at 18-5, after the arrival of No. 6 Trivandrum Express. As this train was introduced for the convenience of students and businessmen it was explained that, if the suggestion were carried out, it would not only inconvenience the travelling public but also divert the traffic to the buses. The Committee was informed that it was proposed to extend this train as well as No. 286 to Paramakkudi in order to meet the local needs, the latter running to slightly altered timings.

The suggestion to bring the Shencottah Passenger to Trichinopoly Jn. at 3-43 hrs. so as to connect No. 25 leaving Trichinopoly Jn. at 3-50 was considered and the Committee was informed that with the proposed revision of the timings of certain trains on the Madura Manamadurai section from 15—12—33 No. 25 will connect No. 12 Shencottah passenger at Trichinopoly Junction.

The proposal to run 2 additional trains, one from Manamadurai to Trichinopoly Jn. arriving at the latter place at about 16-45 hrs. so as to maintain connection with No. 10, Trivandrum Fast Passenger leaving Trichinopoly Jn. at 17 hrs., and the other from Trichinopoly Jn. to Manamadurai connecting with No. 6 Trivandrum Express which arrives at Trichinopoly Jn. at 22-33 hours was not accepted as there was no justification for these extra trains.

Traffic facilities.

In connection with the raising of the rail level platforms, the Committee was informed that these platforms were the standard adopted for way-side stations. The Chairman however agreed to look into the question of raising the level of the platform at Tellicherry which was considered by the Committee an important station. In regard to the question of external lighting of trains the Chairman stated that the proposal had already been given a trial on this Railway in 1926 and as the cost was high the matter was dropped.

The Committee desired that Coimbatore station should be provided with electric lights pending remodelling of the station but they were informed that, as the remodelling would be taken on hand shortly, it was not worth while providing electric lights as a temporary measure.

As regards the provision of 2 additional water taps, 4 high power lights and a waiting shed at Karaikkudi the Chairman explained that, as the supply of drinking water at the station was limited, it was not possible to provide additional taps for the present and added that some of the post lamps had been substituted by 2 high power lights and that the necessity for a waiting shed would be considered when financial conditions improved.

The Committee was informed that instructions have been issued to replace the vertical hand pumps in the lavatories of upper class carriages by rotary pumps when the carriages are taken to the workshops.

The Committee then suggested the opening of a booking office for issue of passenger tickets and booking of luggage at some central place within the city of Madras and the Chairman stated that arrangements were being made with the Madras and Southern Mahratta Railway to also sell tickets for stations on the South Indian Railway at their Mount Road Booking Office. The Chairman agreed to arrange with the carting contractors to deliver luggage of passengers at their

residence in Madras as a trial measure

Miscellaneous.

The Chairman informed the Committee that an estimate for the construction of an overbridge at Tiruppur had been forwarded to the Municipality and that on receipt of their approval the work would be put in hand. Proposals for the provision of a separate waiting room at Koradacheri station and for increasing the number of the licensed vendors at Dindigul station were not accepted.

The Committee desired that the Guards of trains should be instructed to see that trains were not started from minor stations before passengers got into or out of them The Chairman pointed out that the existing rules on the matter were very clear and that a strict adherence to them would be enforced.

The proposal of the Committee to issue concession return tickets during X'mas for distances of 50 miles and over and to increase the free allowance of luggage to 30 seers per ticket was not accepted.

The Chairman informed the Commitee that the question of widening the gate connecting the goods shed road and Railway feeder road at Nallatinputtur would be looked into.

The Chairman placed before the Committee a suggestion to mark only the upper class stock and leave the 3rd class carriages unmarked as was being done on the Great Western Railway in England. The Commitee agreed that the proposal might be tried but suggested that tri-composite carriage should be marked completely,

After considering the special arrangements to be made in connection with the festivals that will take place in the months of December and January the meeting terminated.

A PATENTED FORMULA

for making acid vapour proof Artificial Gold (with out Gold, Platinum, or any costly material) Rs. 2—8—0 only. Free gift half tola of Paris Gold, if you order immediately.

House of Commerce—**Gauhati.**

WANTED

Capable agents of influence among merchants in all the important towns to canvas subscribers and to get advertisements for "Varthaga Oolian". Liberal terms to really capable workers.

Apply to:—The Manager.

Varthaga Oolian, Trichinopoly.

TRADE MARK CAUTION.

Notice is hereby given that Mr. A. ABDUL RAHIMAN ALIM SAHIB, Bagamboor, Dindigul, is the owner and sole proprietor of the following Trade Mark:—

"RAHIMI" (Regd. No. 3195 of 1933.)

The said Trade Mark is used in respect of the description of goods following that is to say:— "BETELNUTS & TOBACCO"

Any imitation or fradulent use of the said Trade Mark will be dealt with according to law.

REGISTRATION AGENCY, Patent & Trade Mark Agents,
9. Chunnambukara St., Trichinopoly.

SUPERFLUOUS HAIR.

Buy a bottle of "Destroyer" that will remove all ugly and superfluous hair in three minutes. "Destroyer" completely extracts the hair roots thus preventing further growth. "Destroyer" leaves the skin soft, supple and causes no irritation. Bottle containing a complete cure costs Rs. 2 only. Postage extra.

N. B.—Money refunded, if not benefitted.

Manager:—THE GULZAR TRADING AGENCY,
Post Box No. 72, Lahore.

Matter No. A. D.

TRADE SECRETS.

Scented Hair Oils.

Refined coconut or til oil	5 seers.
Balsam peru	2½ oz.
Fly Cantharides	5 dr.
Sandal Oil	15 dr.
Alkanet root	15 dr.
Otto of Hena	5 dr.
Oil of rosemary	10 dr.

First of all the oil is treated with alkanet root and allowed to remain undisturbed for 2 days for colouring. Then strain the oil through cloth. The fly cantharides are next fried in about 1 chattak of fresh coconut or til oil and when these are well fried and discoloured, these are allowed to cool. Afterwards add the previously coloured oil and the balsam peru after melting. Finally add the other ingredients one by one with constant shaking.

Scents.

Essence of Rose	16 oz.
Essence of Keora	2 "
Essence of Jasmine	2 "
Lily of Valley	1 "
Essence of Amber	1 "

Mix together, shake for 15 minutes, three times a day for 3 days. Then use

Essence of Chameli	16 oz.
" " Rose	4 "
" " Jasmine	2 "
" " Neroli	1 "
" " Amber	½ "
" " Musk	½ "

Make as before.

Copal Varnish.

Oil of turpentine 1 pt. set the bottle in a water bath and add in small portion at a time 3 oz. of powdered copal that has been melted by a gentle heat and dropped into water; in a few days decant the clear liquid and bottle it for use.

Coating for Black Board.

Dissolve 8 oz. of Copal in 1 lb. of ether and compound this with a solution of 2 lbs. of shellac and 1 lb. of sandarac in 3½ quarts of 90 per cent. alcohol and further with 5 oz. of lamp black, 1¾ oz. of Ultramarine, 1 oz. of Venetian turpentine and 2 lbs. of fine Nexos emery. This mixture is then applied with a brush to the Board and the coating while moist is ignited. As soon as the flame is extinguished, a second coat is laid on, which is not ignited but allowed to dry. A third coating may be applied, if necessary. The board is then rubbed with fine sand paper and when cold, washed and when dry, the board is ready for use.

Boot Polish.

Carnuba wax—10 parts, Beeswax—20 parts, caustic soda solution (40°Be)—4 parts, Nigrosine (fat soluble) 15 parts, water (hot)—160 parts, turpentine oil—60 parts. Melt the carnuba and beeswax together, add the liquor and continue to warm till saponification takes place and the mass becomes homogenous. Let the mass cool down 140° F and gradually add the colour which is dissolved in the turpentine oil warmed to 125°F.

Carbon Paper.

Take Lard—12 gms.; Beeswax—2 gms.; Lampblack—2 gms. Melt together the lard and the wax and pour gradually into a warm mortar containing lampblack with constant trituration. Brush this mixture when still liquid over warm paper and remove the excess with a flannel cloth.

Glass Cement.

Dissolve 100 parts of fish glue in 150 parts of 90 per cent. alcohol and add with constant stirring 200 parts of powdered rosin. This cement must be preserved in absolutely tight bottles, as it solidifies very quickly.

Matches.

These are prepared by dipping the splints into a hot solution of any kind of fat and subsequently dipping it in the following inflammable compound:—

Phosphorous	7 parts.
Gum Arabic	40 "
Lead Nitrate	40 "
Pulverised Glass	5 "
Water	10 "

Another formula is given below:—

Mix 1 part of Phosphorous, 5 parts of chalk, 2·8 parts of anhydrous Gypsum, 6 parts of pulverised glass and 6 parts of some agglutinant and colouring matter. This composition requires a rough striking surface.

YOUR FUTURE.

Simply send us a post card with the name of any flower together with your name and address. And we shall send you by V. P. P. for Re. 1 only (postage extra) a detailed account of your forthcoming 12 months, showing among other things profit and loss in business, promotions, transfers and reductions in service, births, marriages, happiness and other bodily ailments. Directions will also be sent to safeguard yourself from the evil influence of the Stars. A trial will convince you of the accuracy of our prophecies Correct answers to any five questions for Re. 1-4 only. Note:—A reward of Rs. 100 shall be awarded to any one challenging our statement.

Prof. G. Shanker,
Post Box No. 72, LAHORE.

Matter No. A. Q.

MADRAS-COLOMBO

Air Mail Service,

(From an esteemed Correspondent)

An air mail service between Madras and Colombo has long been a desideratum and it is understood that Government have practically arrived at a decision on the matter and that the question of a halting place between Madras and Colombo is engaging their attention. Several places are mentioned in this connection, chiefly, Trichy and Chettinad. Facilities are wanting at Trichinopoly for it to become a suitable halting place for mail planes and an enormous outlay would be involved before the incomplete aerodrome at Trichinopoly is made fit for use.

Chettinad, on the contrary, is most centrally situated and is on the direct air route between Madras and Colombo and in time to come is bound to be an important flying centre. It can boast, thanks to the munificence of the **Raja sahib of Chettinad,** of an up-to date aerodrome with a rest house providing modern amenities attached. It has an extensive area where larger machines can be used. The most important point in favor of the Chettinad aerodrome is that it is fit to land at any time of the year, the soil being excellently suited for aviation purposes, whereas the drome at Trichy is of loose soil and gets sodden & therefore unsafe for landing purposes during the monsoon. Chettinad would therefore, appear to afford a much better halting station than Trichinopoly and it is hoped that Government would select Chettinad.

Trade Depression in India.

Of the three prolonged depressions in the last 100 years, the first (1820-50) affected India, but the country kept up steady prices during the "Great" depression of 1873-96, when all Europe was plunged in the slough of a fell slump. India has had its full share of the present depression, as it had in the meantime got more intimately connected with the trade and monetary systems of the rest of the world. In fact, prices had fallen in India more than in most other countries: while the slump in Great Britain was only 30 per cent, in U. S. A. 37 per cent, in Canada 34 per cent, in Australia, 28 per cent, and in Japan 27 per cent Indian prices had fallen 44 per cent. The fall was more marked in primary products than finished goods, the difference being 60 per cent. and 24 per cent. in U.S.A, and 50 per cent. and 26 per cent. in India. The result had been the breakdown of the purchasing power of agriculturists, who form 70 per cent. of the world's population. Hence, the catastrophic fall in world trade, which to-day is hardly 35 per cent. of what it was in 1924. Indian export trade had fallen by 60 per cent., but import trade had only fallen by 47 per cent. and the balance had to be met by exporting gold.

Travancore Rubber Factory.

The Government of Travancore have sanctioned the establishment of a rubber factory in the State.

There are a number of rubber estates in the High Range, bordering on the State, and it may be that these will be drawn on as a source of supply of the raw material,

In this connection it is interesting to note that the area under rubber cultivation in the State during the year 1931-32 was 64,113 acres. There was a considerable decrease in the quantity of rubber exported during that period, a drop of 6,502,429 lbs. being recorded, the total value of exports amounting to Rs. 8,54,117 against Rs. 34,94,453 in the previous year.

The factory would be able to manufacture such articles as solid rubber tyres, cycle and car inner tubes. rubber tyres toys, rubber tubes for laboratory purposes, rubber matting and rubber coated materials.

Mysore Silk Industry.

The report on the working of the Sericultural Department for the year 1932-33, which has been reviewed by Government, shows that the silk industry in Mysore has passed through another year of severe depression. Of recent years, the position of this industry, which is one of the most important industries of Mysore coming next only to agriculture, and provides employment for over two lakhs of people,

has given rise to much anxiety, owing to the present economic depression and to the continued abnormal imports of cheap foreign silk yarns and fabrics resulting in a further drop in prices and consequent heavy loss to those engaged in the industry not merely in the State but in other silk-producing centres of India. Representations were made to the Government of India for the adoption of such measures as would safeguard the interests of the indigenous industry, as a result of which a Tariff Board was appointed last year to inquire into and report on the applications for protection to the industry. The Tariff Board visited several Sericultural Centres in the State, took evidence from the Sericultural Department as well as those interested or actually engaged in the industry and have submitted their report to the Government of India whose decisions are awaited.

In the meanwhile, despite the adverse conditions in operation, every effort is being made to maintain the activities of the department at the normal level.

Raw Hides and Skins.

The Madras chamber of commerce recommended that the tariff valuations on Raw Hides and Skins in force for the past two years had been based upon a very low market and that during the past few months values all round had advanced very sharply and that it was now time for tariff valuations to be raised accordingly.

The suggested valuations for 1934 were as follows:

1. Arsenicated and Air dried hides (a) Cow (including Calf Skins) Framed per lb. As. 8; Cow (including Calf Skins) Unframed per lb. As. 4-6; (b) Buffalo (including Calf Skins) Framed per lb. As. 5-9; Buffalo (including Calf Skins) Unframed per lb. As: 3-6.

2. Drysalted Hides-(a) Cow (including Calf) per lb. As. 5-3; (b) Buffalo (including Calf) per lb As. 3-3.

3. Wetsalted Hides—(a) Cow (including Calf) per lb. As 3-6; (b) Buffalo (including Calf) per lb As. 2-3.

4. Goat and Kid skins per piece Re. 1-4; Sheep skins per piece As. 14.

The Currency League, Madras.

At a public meeting held in the Indian Chamber Buildings, Madras, at 5-30 P. M. on Wednesday the 15th November, 1933, with Mr. M. Jamal Mohamed Sahib in the Chair a Madras branch of the Currency League of India was formed with Mr. M. Jamal Mohamed Sahib as President Messrs. V. C, Rangaswami, Adam Hajee Mohamed Sait, and K. K. Srinivasan as Honorary Secretaries Mr. Yusuff Sait as Treasurer, number of Vice Presidents and ordinary members of the Committee with powers to co-opt any other persons as members were also elected.

PURE GOLD

is too dear. Buy Paris Gold the best Imitation Gold, and save money. Rs. 6 per oz; or Rs. 10 per 2 ozs. (5 tolas). If you hesitate, just get a sample—piece against Rs. 2—8—0 only, before placing a large order.

House of commerce—**Gauhati.**

Have You enlisted yourself as Subscriber to 'Varthaga Oolian' if not do so now.

The subscription for members of the League was fixed at Rs. 6/- per half-year (November to April and May to October) payable in advance, and that an appeal will be made to the public to contribute handsomely for the prosecution of the important national work undertaken by the League.

It was resolved to communicate the thanks of the League to the Southern India Chamber of Commerce, for the donation of Rs 500, for the offer to accommodate the office and for all other help that the Chamber has done and has offered to do.

The last resolution was as "This public meeting of the citizens of Madras extremely regrets to note that the Joint Select Committee on the Reserve Bank Bill has by a narrow majority agreed to retain the clause regarding the 18 d. sterling ratio which indicates that the present Central Legislature and the Reserve Bank Committee do not represent the opinion of the people of India."

மதிப்புரைகள்.

Reviews.

Minco Washing Soaps.

We extend our hearty congratulations to Minco Soap Factory for taking up the manufacture of high class washing soaps, Judging from the samples sent to us, which are made of varying sizes, they are quite good and sold at the lowest possible prices in the market. As they are prepared with pure vegetable oils of the highest quality and being a swadeshi enterprise, all should encourage it The address of the Factory is Victoria Road, 2nd Cross Lane, Mazagon, Bombay 10.

* * *

கதிரேசன் வட்டிக்கணிதவிளக்கம்,

கதிரேசன் வட்டிக்கணித விளக்கத்தில் சரிநாள் பார்க்கும்விதம், மாதராசி பார்த்து வட்டி பார்க்கும் விதம், தின ராசி பார்த்து வட்டி பார்க்கும் விதம். முதலானவைகளை மாதிரி கணக்குகள் மூலமாக தெளிவாக விளக்கி காண்பித்திருக்கின்றன. வர்த்தகர்களுக்கு அவசியமானது. விலை அணா 2. புதுக்கோட்டை சமஸ்தானம் ராயவரத்திலிருக்கும் காந்திபாடசாலை மானேஜர் திரு. சு. கதி. கதிரேசன் செட்டியாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

* * *

கதிரேசன் கணிதச்சுவடி.

தென்னாட்டு தமிழ்மக்கள் பலராலும் வழக்கத்தில் கையாண்டுவரும இலக்கங்களைப்போலவும், புதிய முறையில் முந்திரி, இலக்கம் முதலான தமிழ் கணக்குகளை தொகுத்து புஸ்தகரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ் கணக்குகளை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்கிற வர்த்தகர்களுக்கும், அதில் பயிற்சிபெரும் மாணவர்களுக்கும் மிகவும் அவசியம். ஆகையால் இரண்டணாவுக்கு இப்புஸ்தகத்தை ராயவரம், காந்தி பாடசாலை மானேஜரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்

* * *

புதியவட்டி கணக்கு புஸ்தகம்.

திரு. சு. கதி. கதிரேசன் செட்டியாரால் கணித்து வெளியிடப்பட்ட புதிய வட்டி கணக்கு புஸ்தகம் நமக்கு அனுப்பப்பட்டது. வர்த்தகர்களும் லேவாதேவி கடைக்காரர்களும் மிகவும் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடிய விதமாக பலவித வட்டிகணக்குகளும் சரிநாள் வட்டக்கணக்கு உண்டியல் விலை விபரம் சம்பள ஈவு முதலான விபரங்களும் மிகவும் நுட்பமாய் கணித்து காட்டப்பட்டிருக்கின்றன. வர்த்தகர்கள் இப்புஸ்தகத்தை வாங்கி பயனடைவார்கள் என்று நம்புகிறோம். இதன் விலை ரூ. 3—8—0. கிடைக்குமிடம் மானேஜர் காந்தி பாடசாலை ராயவரம் புதுக்கோட்டை சமஸ்தானம்.

* * *

சரிநாள், நடப்பு, தவணை வட்டிக் குறிப்பு,

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ராயவரம், காந்தி பாடசாலை மானேஜர் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கும சரிநாள், நடப்பு. தவணைவட்டிக் குறிப்பு புஸ்தகத்தில் ஒவ்வொரு காலணாவுக்கும் ஒன்று வட்டி வீதம் 1 நாள் முதல் 32 நாட்களுக்கு சரிநாள் காட்டப்பட்டிருக்கிறது. வெயன் வட்டிகூட எந்த வட்டிக்கு வேண்டுமானாலும் வேண்டும் நாட்களுக்கு சரிநாள் தெரிந்துகொள்ளலாம். விலை அணா இரண்டு. வேண்டுபவர்கள் ஆசிரியரிடமிருந்து பெற்றுக் கொள்ளவும.

* * *

கதிரேசன் வட்டிக்கணிதம்.

நமது பார்வைக்கு அனுப்பப்பட்ட கதிரேசன் கணக்கு புஸ்தகத்தில் மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒன்று வட்டி வீதம் காலணாவுக்கு எவ்வளவென்றும் படிப்படியாக காலணாவாக உயர்ந்து கொண்டேபோய் நூறு ருபாய்வரையில் கணக்கிடப்பட்டிருக்கிறது. 100 பக்கங்களுடைய இப்புஸ்தகம் 6 அணாவிற்கு விற்கப்படுகிறது. லேவாதேவிக்காரர்களுக்கு மிகவும் அவசியமாதலால் சிரமப்பட்டு கணித்திருக்கும் புஸ்தகத்தை வாங்கி ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். புதுக்கோட்டை சமஸ்தானம், ராயவரம் காந்திபாடசாலை மானேஜரிடம் கிடைக்கும்.

* * *

கதிரேசன் புதியமாதிரி பெருக்கல் வாய்ப்பாடு.

கதிரேசன் புதியமாதிரி பெருக்கல் வாய்ப்பாடு என்னும் புத்தகத்தில் எண் கூட்டல்களும், அதே டேபிள் மூலம் எண் கழித்தலும் தெரிந்துகொள்வதற்கு வழிகள் விளக்கிக் காட்டப்பட்டிருப்பதோடு பெருக்கல் வாய்ப்பாடுகள் புதிய முறையிலும், பின்ன இலக்க விளக்கம் மூலம் தருபின்னங்களும், தசாம்ச பின்னங்களும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. திரு. கதிரேசன் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு கணித்திருக்கின்றார். விலையும் இரண்டணாவாகயிருப்பதால் ராயவரம், காந்தி பாடசாலை மானேஜர் திரு. சு. கதிரேசன் செட்டியார் அவர்களிடமிருந்து தருவித்துக் கொள்ளலாம்.

* * *

பிரேமாஹரன்.

ஸ்ரீ சரஸ்வதி அம்மாளால் எழுதப்பட்ட பிரேமாஹரன் என்னும் துப்பறியும் நாவல் கிடைக்கப்பெற்றோம். துப்பறியும் புருடர்களால் கண்டுபிடிக்கமுடியாத விஷயங்களை கதாநாயகியின் சகோதரி புருடவேடம் பூண்டு துப்புதுலக்கி ஜயம் பெறுவது ஸ்திரீகளுக்கு கௌரவம் கொடுத்ததை குறிப்பிடுகிறது. தாசிலோலர்களுக்கு இந்நாவல் பயன்தருமென்று நம்புகிறோம். பெண்பாலர்களால் எழுதப்படும் நாவல்களில் இதுவும் சிலாகிக்கக்கூடியனவே. இனிய தமிழில் எளிய நடையில் எழுதப்பட்ட இந்நாவல் சில ஆப்டோன் படங்களுடன் ரூ. 1-8-0க்கு விற்கப்படுகிறது. 1934ஹு எப்ரல் மாதம் 10உ மாலை 7 மணி வரையில் விற்கப்படும் புஸ்தகங்களுக்கு நம்பரிட்ட கூப்பன்கள் சொடுக்கப்படும். இவைகளை 14உ குலுக்கி 10 பிரைஸ் நம்பர்கள் எடுக்கப்படும். பரிசுகள் ரூபாய் 5 முதல் 100 வரை உள்ளது. கிடைக்குமிடம்—பிரேமாஹரன் புஸ்தகாலயம், 2/23 இப்ராஹிம்ஜீ சாயபு தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

தங்கம் இனாம்.

தங்கம் செய்யும் விதம் ரூ. 2-8-0க்கு அனுப்பப்படும். உடனே ஆர்டர்செய்கிறவர்களுக்கு அரை தோலா தங்கம் இனாமாக அனுப்பப்படும். விலாசம்:—

அவுஸ் ஆப் காமர்ஸ், கேளகத்தி.

(ஆங்கிலத்தில் எழுதவும்.)

அத்யாத்ம யோகம்.

முற்றிலும் அநுபவம் வாய்ந்த இந்நூல் நமக்கு அனுப்பப்பட்டது. ஸர்வ வல்லமையுள்ள கடவுள்' எனும் 1-வது அத்தியாயத்தில் பரம் பொருளினது ஸர்வ வியாபகத் தன்மை, அதன் இருப்பிடமான ஹ்ருதயம், இரண்டல்லாத ஒரு பொருளை பற்பல மதத்தினர்களும், கொள்கைக்காரர்களும் எவ்விதம் அழைக்கிறார்கள்? என்பவைகளைப்பற்றி உபநிஷத்துகள், மற்ற சாஸ்திரங்கள் வாயிலாக நிரூபிப்பதையும், 2-வதான அத்யாத்ம யோகம்' என்பதில் இதர யோகங்களுக்கும் அந்த அத்யாத்மயோகத்துக்கும் உள்ள வித்தியாசம் பற்றியும், பற்பல யோகிகளின் நடை, செயல்கள் பற்றியும், இந்த யோகம் எல்லா யோகங்களினது சிகரமாகுமென்பதையும், அபாயகரமில்லாதது பற்றியும் பல ஆதாரங்களுடனும், சொந்த அநுபவத்துடனும் 3-வது, 4-வது அத்யாயங்கள் முறையே 'ஸங்கீதம், பஜனையின் அவசியம்' ஆகும். 5, 6-வது அத்யாயங்கள் ஆசாரியன், சீஷன்' என்பனவாகும்! இவைகளில் எவ்விதம் மாதா, பிதாக்களைப் பார்க்கிலும் குரு சீஷனைக் காக்கிறாரென்பது பற்றியும், சீஷன் எவ்விதம் குருவிடம் நெருங்கவேண்டுவது பற்றியும் விரித்துள்ளார். 7, 8, 9, 10, 11 இந்த ஐந்து அத்யாயங்களும் முறையே 'சரீரப் பயிற்சி, பிரும்மசரியம், ஆகாரம் ஆஸனம், பிராணாயாமம், என்பவைகளைக்கொண்டதாகும், இவைகள் அத்யாத்மயோகத்தின்கண் ஈடுபட விரும்புகிற ஜீவயாத்திரீகர்களுக்கு அவசியமானவைகள், இவைகள் பகிர் (வெளி) விஷயங்களானவைகளானாலும் இவைகளை கூடியவரையில் சரிவர அநுஷ்டித்தாலல்லாது அந்தர் (உள்) விஷயமான யோகத்தில் ஈடுபடமுடியாது. 'ஜாக்கிரியம்' தியானம், சமாதி' என்னும் 12, 13, 14வது அத்தியாயங்களின் முழுவதும் அநுபவங்களையும், பயிற்சிப் பாடங்களையும் உடையனவாகும். இவைகளில் படிக்கிரமங்களுடன் யாவரும் சுலபமாக ஸமாதி நிலையை அடைந்து கொடிய ஸம்ஸார ஸாகரத்தினின்று விடுபடும் பாதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. முடிவான 15-வது 'பிரார்த்தனை'யில் பக்தியின் உதயம் முதல் சச்சிதானந்தத்தின் பூர்ண அநுபவம் வரையிலுமுள்ள பல தசைகளிலும் உண்மைப் பக்திப் பொங்கித் ததும்பும் விஷயங்களைக் கொண்டதாக இருக்கிறது சுருக்கமாக உரைக்கின் இந்நூலிலுள்ள விஷயங்கள் யாவும் பற்பல ஆதாரங்களுடனும், ஆழ்ந்த அநுபவங்களுடனும் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினால் இந்த அரிய நூலை தமிழறிந்த ஒவ்வொரு ஸ்திரீயும், புருஷரும் கவனித்துப் படித்து நற்பாதையான பகவத்பக்தியில் ஈடுபட வேண்டுமென்றும், புத்தகசாலைகளிலும் அவசியமிருக்கவேண்டுமென்றும், வற்புறுத்துவோம்.

தஞ்சை ஜில்லா சேங்காலிபுரம் ஸ்ரீமான் **குகதாஸ்** இயற்றியது. ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீமான் K. S. **ராமஸ்வாமி சாஸ்திரிகள்** அவர்களின் ஆழ்ந்த அநுபவம் வாய்ந்த முகவுரையுடன் கூடியது திருவண்ணாமலை **ஸ்ரீரமண ரிஷி**, தேவர்மலை **ஸ்ரீராமாநந்த ஸரஸ்வதி** இம்மகான்களினது உபதேசங்கள் பெற்றது. ஆதி சங்கராச்சாரியார், காமகோடி பீடாதிபதி, ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ரமண முனி, ராமாநந்த ஸரஸ்வதி இம்மகான்களின் படங்கள் அழகிய ஆர்ட்டு பேப்ரில் அச்சிடப்பட்டுள்ளது.

விலை. ரூ. 2—8—0. காப்பிகள் கிடைக்குமிடம்:—காரிய தரிசி, 'குகாலயம்' சேங்காலிபுரம் P. O., (தஞ்சாவூர் ஜில்லா).

* * *

ஸ்ரீஸுப்பிரமண்ய ப்ரஸந்ந மாலா மந்திரம்,

இம்மந்திரத்தின் காப்பி ஒன்று வரப்பெற்றோம். இஃது 'குமார தந்திரம்' என்னும் ஓர் உயர்ந்த நூலில் ஹயக்ரீவ அகஸ்திய ஸம்வாத ரூபமாக உரைக்கப்பட்டிருக்கிறது. இம்மந்திரத்தை பிரதி தினமும் ஸ்ரீ ஸுப்பிரமண்யக் கடவுளின் ஸந்நிதானத்தில் மனதை ஒருமைப்படுத்தி சில தடவைகள் பாராயணம் செய்து வருவதினால் ஜீவர்களுக்கு இவ்வுலகில் ஏற்படுகிற பற்பல வியாதிகள் நிர்மூலமாகுமென்பதும், கொடிய கிரகங்களினால் சம்பவிக்கின்ற பற்பல பீடைகள் நிவர்த்தியாகுமென்பதும், விஷ ஜந்துக்களால் ஜீவர்கள் பாதிக்கப்படமாட்டார்களென்பதும், சுருக்கமாக உரைக்கின் பல உபத்திரவங்களினின்று ஜீவன்கள் மீளலாமென்பதும், **பரவுலகின்கண்** எங்கும் நிறைந்த பகவானின் பாதகமலத்தில் நிரந்தர பக்தி ஏற்பட்டு அதன் வாயிலாக ஓர் பரம்பொருளில் இரண்டறக் கலக்கலாமென்பதும் இம்மந்திரத்தைக் கவனித்துப்பார்க்கப் புலப்படுகிறது. இஃதில் பல பீஜ (உயிர்) மந்திரங்களும் கலந்திருக்கின்றன. இதுவரையில் அச்சில் வெளிவராத இம்மந்திரத்தை அழகிய ஆர்ட்டுப் பேபரில் நாகரத்திலும், தமிழிலும் அச்சிட்டிருக்கிறது.

தான்ய நிலைமை.
(Crop Reports)

நிலக்கடலை.

கர்நூல், பெல்லாரி, அனந்தப்பூர், கடப்பை, குண்டூர், சித்தூர், செங்கல்பட்டு, வட ஆற்காடு, கஞ்சம், தென் ஆற்காடு, திருநெல்வேலி, நெல்லூர் முதலான இடங்கள் நீங்கலாக மற்ற ஜில்லாக்களில் நிலக்கடலை நல்ல விளைச்சல். அக்டோபர் மாதக்கடைசியில் மணங்கு ஒன்றுக்கு கூடலூரில் ரூ. 4. விசாகப்பட்டணத்தில் ரூ. 3—11. விஜயநகரத்தில் ரூ. 3—10, மற்ற ஜில்லாக்களில் ரூ. 2—11—0 முதல் ரூ. 3—5—0 வரையில் விற்றது.

கருப்பு.

கஞ்சம், மேல கோதாவரி, கீழ கோதாவரி, ஜில்லாக்களில் அதிக மழையினால் கரும்பு சேதப்பட்டுவிட்டது. மற்ற ஜில்லாக்களில் விளைச்சல் நல்ல நிலைமையிலிருக்கிறது. அக்டோபர் மாத கடைசியில் வெல்லம் நந்தியாலில் மணங்கு ஒன்றுக்கு ரூ. 5—5, ஈரோட்டில் ரூ. 5—2. பெஜவாடா, குண்டூரில் ரூ. 4-6, மற்ற ஜில்லாக்களில் ரூ. 3-5-0 முதல் ரூ. 4-2-0 வரையில் விற்றது. சென்ற மாத விலைகளை ஒப்பிட்டு பார்த்தால் காகினாடா, குண்டூர், பல்லாரி, கடப்பை, ஜில்லாக்களில் 100க்கு 3 முதல் 10 வரையில் உயர்ந்திருக்கிறது. மற்ற ஜில்லாக்களில் மாறுதல் கிடையாது.

நெல்.

நெல் கர்னூலில் மணங்கு ஒன்றுக்கு ரூ. 2-10, கடப்பையில் ரூ. 2-3, நெல்லூரில் ரூ. 2-2, மற்ற ஜில்லாக்களில் ரூ. 1-6-0 முதல் ரூ. 2-0-0 வரையில் அக்டோபர் மாத கடைசியில் விற்றது. கிருஷ்ணா, குண்டூர், கர்நூல், பெல்லாரி, அனந்தப்பூர், கடப்பை, திருச்சினாப்பள்ளி, திருநெல்வேலி, மலபார ஜில்லாக்களில் சென்ற மாதம் விற்ற விலையில் மாறுதல் கிடையாது. மதுரையில் 100க்கு 19 வீதமும், வட ஆற்காட்டில் 13 வீதமும், தென் கன்னடத்தில் 9 வீதமும் மற்ற ஜில்லாக்களில் 3 முதல் 6 வீதமும் குறைந்து விற்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமான் **குகதாஸ்** அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டது. விலை அணா 2 2½அணா பெறுமானமுள்ள தபால் தலைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். காப்பிகள் கிடைக்குமிடம்:—காரிய தரிசி 'குகாலயம்' சேங்காலிபுரம் P.O., (தஞ்சாவூர் ஜில்லா).

ராஜம்—சமூக சீர்திருத்தக் கதை.

Social Reform Novel.

(திரு. எம். எஸ். ஆர். சந்திரன் எழுதியது.)

நவம்பர் மாதத் தொடர்ச்சி.

அத்தியாயம் 18.

சின்னராணியும் சோதிடரும்

அஃதோர் பெரிய மைதானம். மைதானத்தைச் சுற்றிலும் தார் ரஸ்தாக்கள் வெகு சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன. ரஸ்தாக்களின் இருபக்கங்களிலும் வரிசையாக மரங்கள் வளர்ந்து ரஸ்தா முழுதும் கூடாரம்போல் அவற்றின் கிளைகள் வளைந்து தொங்கின. அம்மரங்களில் சில சிகப்பு நிறப் புஷ்பங்களையும், மற்றுஞ் சில மஞ்சள் நிறப் புஷ்பங்களையும் வேறு சில வெள்ளை நிறப் புஷ்பங்களையும் தாங்கி நின்றன. ரஸ்தாவையொட்டி மணற்பாதை ஒன்றும் இருந்தது. அம்மைதானத்தையும், அதனையொட்டியுள்ள மணற்பாதையையும், அதையடுத்துள்ள அழகிய தார் ரஸ்தாவும் இருப்பதையும் குதிரைப் பந்தயத்தில் அனுபவமுள்ள ஒருவன் பார்த்தால் இதனைக் குதிரைப் பந்தய மைதானமென்றே தீர்மானித்துவிடுவான். ரஸ்தாவின் ஒரு பக்கமாகவுள்ள பங்களாக்கள் யாவும் மைதானத்தையே நோக்கிக் கட்டப்பட்டிருந்தன. அம்மைதானத்தின் வடபக்கத்து ரஸ்தாவின் மத்தியில் ஒரு பெரிய பங்களா ஒன்று இருக்கிறது. அதன் முன்பக்கத்து வாசலின் செமண்டினால் கட்டப்பட்ட தூணில் "லட்சுமி மஹால்" என்ற எழுத்துக்கள் ஆங்கிலத்தில் பதிக்கப்பட்டு பிரகாசித்தன. அதன் பக்கமாக துப்பாக்கியும் கையுமாக ஒரு சிப்பாய் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தால் இந்த பங்களாவில் ஜமீன்தாரோ அன்றி ஒரு சிற்றரசரோ தங்கியிருப்பாரென்று தீர்மானித்துவிடலாம். அந்த சிப்பாயுடன் வேறு சேவகன் ஒருவன் சம்பாஷித்துக்கொண்டிருந்தான். அச்சமயம் மாலை சுமார் 4 மணி இருக்கும். அந்த சிகந்தராபாத்தில் தாய் பாஷை தெலுங்கானதினாலும், சிப்பாய்கள் பொதுவாக ஹிந்துஸ்தானியே பேசுவதாலும் சிப்பாயும், சேவகனும் பேசியது இன்னதென்று குறிப்பாக ஒருவராலும் நிர்ணயிக்கமுடியாது. இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் சமயம் ஒரு மோட்டார் வண்டி வந்துநின்றது. வண்டிக்குள் ஒரு கனவான் 10 முழ நீளமுள்ள காஞ்சீபுர பட்டு வேஷ்டியை வைதீக முறைப்படி கட்டிக்கொண்டு பட்டு ஷர்ட்டுடனும் 6 முழ பட்டு யோக வேஷ்டியுடனும் இடுப்பில் சிறு கைக்குட்டையுடனும், நேர்த்தியான தலைப்பாகை தரித்துக்கொண்டும் கையில் வெள்ளிப்பூண் கட்டப்பட்ட பெரிய நேர்த்தியான தடியுடனும் மோட்டாரை விட்டு இறங்கினார். மேலும் இவரது நெற்றியில் ஜவ்வாது பொட்டு கால் ரூபாய் அளவுக்கு விளங்கியது. அப்பொட்டுக்கு அடியில் குங்குமப்பொட்டும் பிரகாசித்தது. வண்டியில் வந்திறங்கிய பெரியார் ஒரு பெரிய வைதீகரென்றும், பெரிய பண்டிதர் என்றும், சாஸ்திர விற்பன்னரென்றும் சிப்பாயும் சேவகனும் எண்ணி அப்பெரியாருக்கு கைகூப்பி வந்தனஞ் செலுத்தினார்கள். தாங்கள் இன்னாரென்று தெரிவித்தால் தங்களுக்கு ஆகவேண்டியதைச் செய்து தருவோம் என்று பணிவாக இருவரும் தெரிவித்துக்கொண்டார்கள். வந்த பெரியவரும் அவர்களது பணிவைக் கண்டு மெச்சி ஒரு சிறு கடிதத்தை சேவகன் கையில்கொடுத்து இதனைக்கொண்டு போய் ராணியம்மாளிடம் கொடுத்து என்ன உத்திரவு பிறக்கின்றதோ அதனை நம்மிடம் தெரிவிப்பாய் என்று ஹிந்துஸ்தானியில் கூறினார். சேவகனும் உள்ளே செல்ல முற்பட்டு நாலைந்தடி நடந்துசென்று திரும்பியும் பெரியவரிடம்வந்து, ஸ்வாமி பெரிய ராணியிடமா அல்லது சின்ன ராணியிடமா இதைக் கொடுப்பது என்று கேட்டான். பெரிய ராணி யார், சின்னராணி யார், என்று பெரியார் கேட்டார். பெரிய ராணிதான் ஸ்வர்ணபுரி மகாராஜாவின் மனைவி. சின்ன ராணி என்று சொல்ல வாய்திறக்கும்போதே சேவகனுக்கு நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. 'என்னப்பா தைரியமாகச் சொல்லு. ஒன்றுக்கும் பயப்படாதே. நான் பெரிய சாமியார். நானிருக்கும்போது உனக்கு என்ன பயம். தைரியமாகச் சொல்லலாம்" என்றார் பெரியவரும்.

"மகா பொல்லாத கள்ளர்கூட்டங்களுடன் தைரியமாகவும், தனியாகவும் நின்று சண்டை செய்து அவர்களைக் கொன்றுபோட்ட ராணியம்மாதான் சின்ன ராணி" என்றான் சேவகன்.

"இதைச்சொல்ல உனக்கு ஏன் இவ்வளவு பயம்?" என்றார் பெரியவர்.

"அந்த அம்மாள் கொன்றுபோட்ட கள்ளர்களை நினைக்கும்போதும், அந்த அம்மாள் சதா சர்வகாலமும் கையில் வைத்துக்கொண்டிருக்கும் பளபளப்பான கத்தியைப் பார்க்கும்போதும் எனக்கு பயம் அதிகரிக்கின்றது" என்றான் சேவகன்.

"அப்படியானால் சின்ன ராணி கையிலேயே இக்கடிதத்தைக் கொடு" என்றார் பெரியவரும்.

"அந்த ராணியம்மாவிடம் போவதென்றால் அதிக பயம் எனக்குண்டு. நான் போய் கடிதத்தைக் கொடுத்துவருகிறேன், எனக்கு ஏதாவது இனாம் தருகின்றீர்களா." என்று சேவகன் கேட்டான்.

"ஆஹா. அதற்கென்ன தருகிறேன்" என்றார் பெரியவரும்.

சேவகனும் கடிதத்தைக் கையில் வாங்கிக்கொண்டு சின்ன ராணி தங்கியிருக்கும் கட்டடத்தின் வாயில் பக்கம் சென்று ராணியின் பாங்கிமார்களில் ஒருவளைக் கூப்பிட்டு கடிதத்தைக் கொடுத்து "யாரோ ஒரு பெரிய மகான் வாசலில் வந்திருக்கிறார். ராணியம்மாளைப் பார்த்துப் பேசவேண்டுமாம். சமயம் தெரிவிக்க வேண்டுகிறார்" என்றான் சேவகன். பாங்கியும் அதனைக் கையில் வாங்கிக்கொண்டு சென்றாள். மூன்றாவது உப்பரிகையில் தன்னந்தனியே சாய்மான நாற்காலியொன்றில் சாய்ந்துகொண்டு ஏதேதையோ எண்ணி ஏக்கங்கொண்டவளாய் மனக்கவலையென்ற கடலால் சூழப்பட்டு மனோவேதனை என்ற சுழலில் அகப்பட்டுக்கொண்டு வருந்தி தன் கணவனையே தியானித்த வண்ணம் இத்தனை வைபவங்களையும் தன் புருஷன் தன்பக்கமிருக்க அனுப

விக்க முடியாமல் போய்விட்டதேயென வருந்தினாள். முந்தின தர்பாரில் யாவரையும் வரவேற்றவர் தன் தமையன் என்பது நிச்சயமானால் என்னை இன்னாரென்று தெரிந்துகொண்டு என்னுடன் உரையாடியிருப்பாரே, அன்றி ஜாடையாகவாவது பேசியிருக்கவேண்டுமே, அவர் தம் உள்ளத்தை உடனே அறிவிக்காததினின்றும் அவர் எனது அண்ணன் என்று நிச்சயிக்கமுடியவில்லை; அவரது பெயரைமட்டும் கேட்டேன். அதினின்றும் அவர் எனது தமயன் என்று நான் எப்படி நிர்ணயம் செய்ய முடியும். எனது அருமை அண்ணன் எந்தவிடத்தில் வேலையிலிருக்கிறார் என்பது எனக்குத் தெரியாமலிருக்கும்போது இவரை எனது அண்ணன் என்று அவரை மனதில் நினைப்பின் அது முற்றிலும் தவறாகும். அவரை இன்னாரென்று தெளிவாகத் தெரிந்துகொள்ள யாரையாவது அனுப்பினால், அவரும் வந்துவிட்டால், நானும் அவருடன் தாராளமாகப் பேச முற்பட்டேனாகில், அவர் வேற்று மனிதராக இருந்து, அறியாத்தன்மையால் அவரும் என்மீது காதல்கொண்டு தாறுமாறாகப் பேச முற்பட்டால்...என் நிலைமை என்னவாகும். எனவே அக்காரியத்தைச் செய்ய முற்படுதல் கூடாது. நான் சிக்கந்தராபாத்துக்கு வந்திருக்கிற சமயத்தில்கூட எனது ஆருயிர் கணவர் வேலை செய்து ஜீவிக்குமிடத்தைக் கண்டறிய முயற்சிக்காவிட்டால் என்னைவிட துர்பாக்கியசாலியும், யோக்கியப் பொறுப்பற்றவளும் வேறு ஒருத்தி இருந்திருக்கவே முடியாது. இந்த ஜமீனும், மாடமாளிகை, கூடகோபுரங்கள் அமையப்பெற்றுள்ள பங்களாக்களும், பூஞ்சோலைகளும் இந்தப் பட்டுப்பட்டாடைகளும், விலையுயர்ந்த நகைகளும் எதற்கு! எனது கணவனைக்கண்டு களித்து சுகமேகூடி இன்பமெய்யாத இச்சடலம் எதற்கு! எனது அண்ணன் எங்குற்று எந்நிலையில் வசிக்கின்றான் என்பதை, அறிந்துகொள்ளாத நிலைமையில் இதெல்லாம் எதற்கு! ஸ்வர்ணபுரி அரசனோ நம்மீது காதல்குறி காட்ட முற்பட்டுவிட்டான். நாம் திருடர் கூட்டத்தை அழித்த மகா பராக்கிரமசாலியென்ற காரணத்தைத் தம் மனதிற்கொண்டு நம்மருகில் நெருங்கி வாய்விட்டுப்பேச பயப்படுகிறதாகத் தெரிகிறது. மேலும் ஸ்வர்ணகேசிணியும் அவனருகில் இருந்துகொண்டு என்மீது ஒருசமயம் எங்கு காதல்கொண்டுவிடுவானோ, அதையறிந்து எங்கு ஒருசமயம் நான் எனது கைவாளால் அவளைக் கொன்றுவிடுவேனோ, அன்றி அவனையும் நான் அவன் விருப்பப்படி நேசித்துவிட்டால் தனக்குள்ள அந்தஸ்துக்கு ஹானி ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சங்கொண்டே அரசனை அரைக்கணமும் விட்டகலாமல் அவன் பக்கமே இருந்து வருகிறாள். மேலும் இன்னொரு விஷயம். அவளையும் மீறிக்கொண்டு ஒரு சமயம் அரசன் என்னிடம் வந்து என்னை நிர்ப்பந்தித்தால் நான் எங்ஙனம் அவன் கையிலிருந்து தப்புவது. ஏதோ ஒரு பொய்யான பீதிகொண்டல்லவா அவன் என்னிடம் இன்னும் துணிந்து வரவில்லை. இதற்கெல்லாம் சர்வேஸ்வரனே உதவிசெய்து வருகின்றார் என்பது நிச்சயம். இனியும் அவரே எனக்கு உதவி செய்வார், இது சத்யம், இது சத்யம் என்று ஸ்வர்ணம் எண்ணிக்கொண்டிருக்கிற சமயம் யாரோ ஒருவர் வரும் காலடிசத்தம் கேட்டது. உடனே எழுந்து உட்கார்ந்துகொண்டுவருபவரை இன்னாரென்று கவனிக்கமுற்பட்டாள். ரத்னாபாய் என்ற சேடிப்பெண்ணும் ஸ்வர்ணத்தின்முன் வந்து கடிதத்தை நீட்டினாள். கடிதத்தை வாங்கிப்பார்த்தாள். அதில் “மகாமகோபாத்தியாய மகாகாண்டீப மகாபால ஜோஸ்ய வித்வத்சிரோன்மணி சுப்பராவ் பந்துலுகாரு” என்று எழுதப்பட்டிருந்தது. “நான் ஒரு ஜமீன்தாரிணியாக இருப்பதை முன்னிட்டு அல்லவா இப்பெரியார் நம்மை நாடி வருகிறார். இவரை வரவேற்று எனது கணவன் இருக்குமிடத்தைத் தெரிந்துகொள்ள முற்படவேண்டும். நல்ல ஜோதிடப் பண்டிதர் எனது கேள்விக்கு விடைபகராதுபோவாரா. மேலும் இவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டங்களைப் பார்த்தால் இவர் சாமர்த்தியசாலியாகத்தான் இருக்கவேண்டும். இவர் எனது கேள்விக்குச் சரியானபடி பதில் கொடுத்து நமக்கு ஆறுதல் கொடுப்பாரானால் நிச்சயம் இவருக்குத் தக்க சன்மானம் அளிக்கவேண்டும்.” என்று தன் மனதில் தீர்மானித்துக்கொண்டாள். தன் கைப்பெட்டியை தன் நாற்காலி பக்கமாக வைத்துக்கொண்டாள்.

இரண்டடி தூரத்தில் ஒரு குஷன் நாற்காலியொன்றை வைக்க உத்திரவிட்டாள். பாங்கியும் நாற்சாலியைப் போட்டுவைத்தாள். பாங்கிமார்கள் இருவர்களையும் ஹாலின் வெளிவாயிலில் நிற்குமாறு உத்திரவிட்டாள். பெரியாரை உள்ளே அழைத்துவரும்படி உத்திரவிட்டாள். பெரியவரும் மாடிக்குள் வந்ததும் சின்ன ராணியும் கைகூப்பி வந்தனங்கூறி ஆஸனத்தில் அமரும்படி குஷன் நாற்காலியைச் சுட்டிக்காட்டினாள். வந்த பெரியவரும் நாற்காலியில் அமர்ந்து பின்னர் அரண்மனையில் யாவரும் சௌக்கியந்தானே’ என்று ஆங்கிலத்தில் கேட்டார். “பெரியவரது ஆசீர்வாதத்தால் யாவரும் சௌக்கியம்” என்று தனது நாற்காலியைக் கையால் பிடித்துக்கொண்டு நின்றவண்ணமாக ஆங்கிலத்தில் பதில் கூறினாள். பிறகு ஆங்கிலத்திலேயே சம்பாஷணை நடந்தது. “என் தாங்கள் உட்காரலாமே” என்றார். இதற்கு ஸ்வர்ணம் (ராஜம்-சின்ன ராணி) பதில் சொல்லாமல் உட்காருவதா, வேண்டாமா என்று யோசிக்கலானாள். உட்கார எண்ணுவாள். பின்னர் தயங்குவாள். பிறபுருஷர் உட்கார்ந்திருக்க மேலும்-பெரிய வித்வான் ஒருவர்முன்னிலையில் தான் சமமாக உட்காருவது அழகல்லவென்று கருதினாள்.

“ராணி, தாங்கள் தற்போது ரங்கனாதபுரத்து ஜமீன் பூபதியாக விளங்குகிறீர்கள். ’என் உட்காரலாகாது. தாங்கள் ஒரு சமயம் தர்பார் நடத்த நேரிட்டால் அப்பொழுது உட்காரத்தானே வேண்டிவரும். அன்றி ஜமீன் விஷயமாக விசாரணைசெய்ய நேர்ந்தால் அப்போது உட்கார்ந்துதானே குடிகளின் குறைகளை நேரில் விசாரிக்கவேண்டும். மேலும் தங்களைப்போன்றவர்கள் உட்கார்ந்துதான் என்போன்ற பண்டிதர்களை விசாரிக்கவேண்டும். இது சாஸ்திர சம்மதம். மேலும் யார் எதைச் சொல்லுகிறார் என்பதையும் கவனித்து உசிதம்போல் செய்யலாம். வித்வான் ஒருகாலும் தவறாகச் சொல்லவேமாட்டார்” என்று வந்த பெரியவர் சொல்ல ஸ்வர்ணம் சிறிது தாமதித்துக் கடைசியாக தன் விலையுயர்ந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டாள். உட்காரும்போது ஸ்திரீகளுக்குண்டான நாணம் மேலீட்டால் நன்றாக உட்கார மனங்கொள்ளாது தவித்தாள். “என், நன்றாக உட்கார்ந்துகொள்ளலாமே” என்று பெரியவர் வற்புறுத்திக்கூற தன் மனதைத்திடப்படுத்திக்கொண்டு உட்கார்ந்தாள். உட்காரும்போதும் கத்தியை விட்டுவிடவில்லை. மெதுவாக கத்தியை எடுத்துத் தன் மடிமீது வைத்துக் கொண்டாள். கத்தியை எடுத்து மடிமீது வைத்துக்கொள்ளும் சமயம் பெரியவர் திடுக்கிட்டார். இந்தக் கத்தியால் அல்லவா அக்கள்ளர் கூட்டத்தைக் கொன்றாள். ஒரு சமயம் என் போலி வேஷத்தை யுணர்ந்து என்னை கத்தியால் ஒரே வீச்சாய் வீசிக்கொன்றுவிட்டால் என் செய்வது. எப்படி இவளிடமிருந்து தப்பிப்பது” என்ற பயம் அப்பெரியவருக்குத் தோன்றியது. இரண்டு மூன்று நிமிஷங்கள் இருவரும் மௌனமாக விருந்தனர். பிறகு ஆங்கிலத்தில் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

"ஸ்வாமி, தாங்கள் ஜோதிஷத்தில் விற்பன்னர்தானே"

"ஆம்; அதனால்தான் நமக்கு பெரிய பட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன."

"தாங்கள் எந்த ஊர், தெரிந்து கொள்ளலாமா"?

"பக்கத்தில் ஹைதராபாத்து"

"எங்கே. இப்படி வந்ததோ".

"தங்கள் வீரதீரத்தைப்பற்றி கேழ்விப்பட்டேன் இவ்விடம் வந்து பேட்டி கண்டுபோகலாம் என்றுதான்"

"ஆகா, மெத்த சந்தோஷம். தாங்கள் பெரிய ஜோதிஷராயிற்றே"

"(மனதைத்திடப்படுத்திக்கொண்டு) ஆம், அதற்கென்ன சந்தேகம்"

"என் மனதில் ஒரு விஷயத்தை நினைத்துக்கொண்டிருக்கிறேன். அது இன்னதென்று சொல்லக்கூடுமோ"

"ஆகா; அதற்கென்ன தடை; இதோ சொல்லுகிறேன்" என்று பெரியவரும் பலவாறு மனதில் நினைக்கலானார். இவளுக்கு ஜமீன் கொடுத்தது ஸ்வர்ணபுரி அரசன், அவனது மேற்பார்வையில் அவனது மனைவியுடன் இருந்து வருகிறாள். அந்த ஸ்வர்ணபுரி அரசன் இவளைக் காதலித்தாலும், அன்றி இவள் அவனை மணக்க நினைத்தாலும், அன்றி தன் கணவனை அடைய விரும்பினாலும், அன்றி தன் தாய் தந்தையர்களைக் காண விரும்பினாலும் அவள் தற்போது வேண்டுவது ஒரு உயிரை ஜீவனைக் குறித்துத் தான் கேழ்க்கிறாள் என்று தீர்மானிப்பதுதான் உசிதம். அது தவறின் பின்னால் மாற்றிப் பேசுவோம் என்று மனதில் நினைத்துக்கொண்டு, "தாங்கள் தற்போது நினைத்துக் கொண்டிருப்பது ஒரு ஜீவனைப்பற்றியதாகும். இல்லையானால் பொருளைப்பற்றியதாகும்." என்றார் பெரியவர். "முதலில் சொன்னதே சரி" என்றாள் ஸ்வர்ணம். முதல் பரீட்சையில் தேறிவிட்டோம் என்று தீர்மானித்துக்கொண்டார். விரல்விட்டு எதையோ எண்ணுவதுபோல பாசாங்கு செய்து ஏதோ மேஷ, சிம்மம் என்று முணு முணுத்தார். "இவளோ நாணம் மேலிட்டு அடக்க ஒடுக்கத்துடன் விளங்குகிறாள். பதட்டமான பதங்களை அவள் உச்சரிப்பதாகக் காணோம். கற்புநிலை தவறிய பெண்கள் பேசும் முறையில் இவள் இருக்கக் காணப்படவில்லை. நம்மை நிமிர்ந்துகூட சரியாக பார்க்கவில்லை. தலை குனிந்தவண்ணமாகவே பேசுகிறாள். ஆகையால் இவள் தன் புருஷனைக் குறித்தே கவலை கொண்டிருக்க வேண்டும் இல்லையானால் ஸ்வர்ணபுரி அரசனிடம் காதல் கொண்டிருந்தாலும் நெருங்கிய உறவு இருப்பதாகச் சொன்னால் அதுவும் பொருத்தமான குறியாகும்" என்று மனதில் தீர்மானித்து மகா ராணியே, தாங்கள் மனதிற்கொண்டிருக்கும் ஜீவனுக்கும் தங்களுக்கும் நெருங்கின உறவும் பழக்கமும் இருக்க வேண்டுமே, இல்லையானால் உறவும் பழக்கமும்சீக்கிரம்ஏற்பட்டுவிடுமென்று நீங்கள் கேட்ட ஆரூட லக்கினத்திலிருந்து தெரிகிறது" என்றான். இனிதான் ஏற்படவேண்டும்." அப்படி ஏற்படவிருக்கும் ஜீவன் இன்னாரென்று சொல்ல முடியுமா" என்று திரும்பக் கேட்டாள்.

இரண்டாவது கேள்வியிலும் நாம் தேறிவிட்டோம். 'இனி ஏற்படவிருக்கும் ஜீவன் என்ன என்று கேட்டதிலிருந்து பெற்றோர்கள் இல்லையென்பது தீர்மானமாகிவிட்டது. இனி, ஒன்று கணவனாகவிருக்கவேண்டும், அதில்லையானால் ஸ்வர்ணபுரி அரசன்மீது காதல் கொண்டிருக்கவேண்டும், எதற்கும் கணவன் என்று சொல்லிப் பார்ப்போம்" என்று மனதில் தீர்மானித்துக்கொண்டு, "ராணியே, தாங்கள் மனதிற்கொண்டு மனக்கலக்கமுற்றிருப்பது தஙகள் ஆவியினும் சிறந்த ஜீவன். அதனை கட்டழகன் என்றும் கணவன் என்றும். பர்த்தாவென்றும் சொல்லலாம்." என்றார் பெரியவரும்.

சின்ன ராணிக்கு ஒரு சிறிது மனமகிழ்ச்சி யேற்பட்டு அதன் அறிகுறியாக புன்னகைக் குறிகள் முகத்தில் தோன்றின ஜோதிஷரும் தன் மனங் குளிரும் வண்ணம் பலன் சொல்லுவதாக தனக்குள் நினைத்தாள். இவர் மூலமே தனது கணவரது இருப்பிடத்தை அறிந்து கொள்ளுவதெனத் தீர்மானித்தாள். சில நிமிஷம் தாமதித்து, 'ஐயா, பெரியவரே, எனது ஆவியினும் சிறந்த ஜீவன் என்றும், அதனைக் கணவன் என்றும் சொன்னீரே. அந்த ஜீவன் எந்தவிடத்தில் வாசஞ்செய்து கொண்டிருக்கின்றதென்று சொல்லக் கூடுமா."

"ஆம் சொல்லலாம், தாங்கள் தற்போது கேட்ட ஆரூட லக்னம் சரலக்னமாயிருக்கிறது, சரமென்றால் அசைவது அல்லது நடை, ஒரே இடத்தில் தங்கி விடக்கூடிய லக்னமல்ல. மேலும் லக்னாதிபன் ஸ்திர லக்னம் அல்லது ராசியிலிருந்து இப்போதுதான் சர ராசிக்குள் நுழைந்தான். ஆகையால் இதுகாறும் நீங்கள் மனதிற்கொண்டிருக்கிற ஜீவன் ஸ்திரமான ஒரு இடத்திலிருந்து புறப்பட்டு தற்காலீகமாக மற்றொரு இடத்துக்கு வந்திருக்கிறதாகப் புலப்படுகின்றது." என்று பதில் கூறிவிட்டு "அவள் மனதிற்கொண்டுள்ள ஜீவன் அவளது புருஷனைக் குறிக்குமானால் ஹைதராபாத்திலிருந்து அவளது புருஷன் தற்போது தற்காலீகமாக சிகந்தராபாத்துக்கு வந்திருப்பதும் உண்மை. புருஷனில்லாது ஸ்வர்ணபுரி அரசன் மீது மனஞ்சென்றிருக்குமானால், உண்மையில் தர்ப்பாரை யொட்டி அவனும் அவனது ஸ்திரமான ஸ்வர்ணபுரியிலிருந்து சிகந்தராபாத்துக்கு வந்திருக்கிறான். இன்னும் சில தினங்களுக்குள் தன் பட்டணத்துக்குத் திரும்பிவிடுவான். நாம் சொன்னதும் ஒருவாறு பொருந்தும்" என்று மனதில் எண்ணிக்கொண்டு "என், நான் சொல்லிய ஆரூடம் எப்படித் தங்களுக்குத் தோன்றுகிறது" என்றார்.

"அதுசரி, குறிப்பாக அவர் இருக்கும் இடத்தைச் சொல்லமுடியுமா,' என்றாள்.

இதற்குள் இவளது வரலாற்றை அறிய விரும்பினார் வந்த பெரியவரும்,

திருச்சி நம்பிள்ளை ஸபை.

ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஸந்நிதியில் டிசம்பர்-மீ 1, 2, 3உ களில் பல வித்வான்களால் உபந்யாஸங்கள் நடைபெறும். மற்ற விபரம் நிகழ்ச்சி நிரலில் காணலாம்.

N. B.-காலையில் ரகஸ்யக்ரந்த காலக்ஷேபம்.
மாலையில் பகவத்விஷய காலக்ஷேபம்.
இரவில் ஸ்ரீமத் ராமாயண காலக்ஷேபம்.
(பிரதிதினமும்) நடைபெறுகிறது.

கார்யதர்ஸிகள்

"இந்த ஆருடத்தில் இருந்து இன்னும் சில விஷயங்கள் உதிக்கின்றன. அவற்றினை சரியா என்று தெரிந்துகொண்டால் வருங் காலக் குறிகளை நன்கு நிர்ணயிக்கமுடியும், சில சந்தேகங்களைத் தெரிந்துகொள்ளலாமா?

"ஆகா, கேளுங்கள், சரியாக விருந்தால் நல்லதுதான்"

"ஆருடலக்கினத்திலிருந்து தங்கள் பூர்வீக ஊர் திருவரங்கப் பெருமானின் நாமம் உடையதாக இருக்கவேண்டுமே."

"எனக்கு தாங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லை."

தங்கள் பூர்வீக ஸ்தலம் ரெங்கனாத புரமாக இருக்கவேண்டுமே."

"ஆம், ரங்கனாதபுரத்து ஜமீன் என்னுடையதுதான்"

ஜமீனைப் பற்றி நான் பேசவில்லை, பூர்வீக ஸ்தலத்தை லக்னம் சுட்டிக் காண்பிக்கிறது."

"அதாவது........."

சோழநாட்டிலே ரங்கனாதபுரம் என்னும் சிற்றூரில் வளர்ந்தவள் என்பது வெளியாகிறது."

"ஆம், அது உண்மை."

"தங்கள் தந்தையாரும் விஷ்ணுவின் பெயர் கொண்டவர்" திருப்பதி ஸ்ரீநிவாசப்பெருமாளின் பெயராகவும் இருக்கலாம்."

"தாங்கள் கூறியதில் தப்பு ஒன்றுமில்லை." என்று சொல்லிவிட்டு சிறிது யோசித்தாள். நமது தந்தை அதிபாலியத்தில் நம்மை விட்டு விண்ணுலகேகிவிட்டனர். ஸ்ரீநிவாசய்யர் நமது வளர்ப்புத்தந்தையாவர். இதன் ரகசியத்தை இவரிடம் தற்போதுள்ள நம் அந்தஸ்தில் தெரிவித்துக்கொள்ளுதல் கூடாது" என்று மனதிற்கொண்டு, மேலே சொல்லுங்கள் பார்ப்போம்" என்றாள்.

"தங்கள் கணவரைத் தங்கள் மனம் நாடி கவலைப்படுவதாக ஆருடம் கிடைத்துள்ளது" என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு தைரியமாகச் சொன்னார் வந்த பெரியவரும்.

"பெரியவரே, தங்களிடத்தில் நான் எனது மனதைத் தாராளமாக விட்டுத் தெரிவிக்க விரும்புகின்றேன். இதுவரை நீங்கள் சொன்னதெல்லாம் சரி. அவர் எங்கிருக்கிறார், அவரை எப்போது சந்திப்பேன் என்பதை நன்றாகப் பார்த்துச் சொல்லுங்கள்" என்றாள்.

"இன்னுமொரு விஷயம் ஆருட லக்னத்தில் தெரிகிறது. அதையும் சொல்லலாமா?" என்றார், அதற்கு ராணியும் உடன் சம்மதித்தாள்.

"தங்களை ஏமாற்றி யாரோ ஒருவன் இந்த பிராந்தியத்துக்கு அழைத்து வந்திருக்கவேண்டும் என்று வெகு தெளிவாகத் தெரிகிறது." இதைக் கேட்டதும் ராணிக்குண்டான சந்தோஷத்துக்கு அளவே இல்லை. பக்கத்துக் கைப்பெட்டியைத் திறந்து நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அவரிடம் கொடுத்தாள். வந்த பெரியவர் அதனைப் பெற்றுக்கொண்டு "தங்களுக்கு மிகுந்த வந்தனம். இந்த நோட்டின்மீது தங்கள் கையெழுத்திருந்தால் அது இந்தப் பிராந்தியத்தில் செலாவணியாகும். தயவுசெய்து கையெழுத்திட்டு இதனைக் கொடுக்க வேண்டுகின்றேன்" என்று சொன்னதும், அவர் சொன்னதையும் உண்மையென்று நம்பி அதன் பின்பக்கத்தில் தன் கையெழுத்தை நாட்டி நோட்டைத் திரும்பவும் பெரியவரிடம் கொடுத்தாள்.

"கணவரை இன்னவிடத்தில் பார்க்கலாம் என்பதை நிர்ணயித்து திடமாகக் கூறலாமா" என்று பின்னுமொரு முறை கேட்டாள். இக்கேள்விக்குக் குறிப்பாக விடை சொன்னால் பின்னும் ரூ. 100 இனாம் கொடுப்பதாகவும் வாக்குக் கொடுத்தாள்.

சிறிது தாமதித்து, "ராணியே நீங்கள் தங்கள் கணவரை சமீபத்திலேயே பார்க்கலாம். அவர் இந்த ஊரிலேயே, உங்கள் அருகிலேயே இருப்பதை நீங்கள் அறியக்கூடும். இங்கேயே அவ-அ-அ — — —". என்று சொல்லி முடிக்குமுன் பாங்கியர்களில் ஒருவள் ஓடோடியும் வந்து பெரிய ராணி தங்களைப்பார்க்க வருகிறார்" என்று தெரிவித்ததும், "ஆகா அப்படியா", என்று சொல்லி தலை நிமிர்ந்து, பெரியவரே, ஸ்வாமி தாங்கள் சென்று வாருங்கள். மற்றொரு சமயம் சந்தித்துப் பேசுவோம்" என்று விடைகொடுக்கும் சமயம் அவளது இருவிழிகளும் இவரது முகத்தை உற்று நோக்கின. வந்தவரும் அவளை ஏற இறங்கப் பார்த்து மனமகிழ்ந்தார். அந்த விடத்தைவிட்டு எழுந்திருக்க வந்தவருக்கு மனம் வரவில்லை. இதற்குள் ஸ்வர்ணபுரி அரசனது மனைவியும் உள்ளேவந்து விட்டாள். திடீரென பெரியவர் எழுந்து ஓரத்தில் நின்று வந்தனங் கூறினார். "ராஜம், இந்தப் பெரியவர் எது இவ்விடம் வந்தது".

"இவர் ஒரு பெரிய ஜோதிடநூல் வல்லவர். ஆருட பலன்களை நன்றாக அறிவிக்கிறார். அவரைத் தருவித்து சில கேள்விகள் கேட்டேன்." பெரியவரைப் பார்த்து "தாங்கள் போய் வாருங்கள் மற்றுமோர்சமயம் தங்களைத் தருவித்து பின்னும் சில சந்தேகங்களைக் கேழ்க்கவேண்டியிருக்கும்" என்று சொல்லி சின்னராணி விடை கொடுத்தனுப்பி விட்டாள்.

பெரியவரும் திரும்பி வெளியில் இறங்கி வரும்போது திரும்பித்திரும்பி சின்னராணி பங்களாவைப் பார்த்துக் கொண்டே திரும்பி மெதுவாக வெளியில் வந்தார். என்ன ஸ்வாமி ரொம்ப நாழியாக சின்ன ராணியுடன் பேசினீர்களே. என்ன வரும்படி, நமக்கு ஏதாவது இனாம் கொடுத்துப் போங்கள்" என்று சேவகன் மறித்தான், தன் இடுப்பில் இருந்து நான்கணாவை எடுத்துக் கொடுத்து இருவருமாகப் பங்கிட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லி வந்த வழியே திரும்பினார். "என்ன ஸ்வாமி, வரும்போது மோட்டாரில் வந்தீர்கள். போகும்போது கால்நடையாகப் போகின்றீர்களே" என்று சேவகன் பரிகசித்தான். அப்பா இன்னும் கொஞ்ச நாளில் அரண்மனை மோட்டாரில் ஏறிச் சவாரி செய்ய எனக்கு பாக்கியம் கிட்டும். அதை நீயே பார்ப்பாய்" என்றார் பெரியவராக வேஷந்தரித்து உள்ளே சென்ற மாப்பிள்ளைரங்கனும் "பாழாய்ப் போன பெரியராணி வராமல் இருந்திருந்தால் 'நான்தான் உனது கணவன்' என்று சொல்லியும் இருப்பேன். அவளும் என்னைக் கட்டிக்கொண்டிருப்பாள். நானும் அவளுக்கு எனதன்பின் அடையாளமாக முத்தந் தந்திருப்பேன். என்ன எனது அறிவீனம், நான் கணவன் என்று சொல்லியிருந்தால் அவள்என்னை உடனே நம்பி விடுவாளா? இதைக் கேட்டதும் ஒருகால் சர்ப்பம்போல் சீறி என்னை வெட்டியிருந்தால் என் கதி என்னாவது" என்று பலவாறாக எண்ணிக்கொண்டே ரெஸிடெண்டு ரோட்டை (ரஸ்தாவை) நோக்கி மாப்பிள்ளை ரங்கன் நடந்து சென்றான்.

(தொடரும்.)

பிரபல ஜோதிடம்.

மகா ராஜாக்களாலும் நன்கு மதிக்கப் பெற்று நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற எங்கள் ஜோதிடரால் சொல்லப்படுகின்ற பலன் சரியாக இருக்கும்.

மாதவாரி வருஷபலன் எழுத ரூ 2.
வாரவாரி ,, ,, ,, 10
ஆருடம் 5 கேள்விகளுக்கு ,, 1

மேற்கொண்ட ஒவ்வொரு கேள்விக்கும் அணா 4. சர்வசித்தி ஷண்முக தாயத்து 1-க்கு ரூ. 2. வி. பி. செலவு அணா 5.

S. அப்பாவு செட்டியார்,
முருகவேல் சோதிட நிலையம்,
கோவில்பட்டி, S. I. R.

M. A. MARICAYAN & CO.,

Ayurveda Vaithiyasalai, Porto-Novo, S. A. District, India.

இதனை வாசிக்கும் புத்திமான்களுக்கும் பக்திவான்களுக்கும் ஓர் விண்ணப்பம்.

இழந்துபோன பலத்தை ஒரேவேளை லேகியம் சாப்பிட்ட 1-மணி நேரத்தில் கொடுக்கும்.

துரையே! கவனியுங்கள்!!

மின்னுவதெல்லாம் பொன்னாகுமா! கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா!
கதையெல்லாம் நல்ல கதையாகுமா! லேகியமெல்லாம் நல்ல லேகியமாகுமா!! [ஆகாது.
பால்போல் ருசிப்பது தேன்போலினிப்பது இதுதான்

மெடல்பெற்ற ஊர்க்குருவி சத்தின் லேகியம்.

நண்பிற்குகந்த அன்பர்காள்! அருமையும் பெருமையும் கீர்த்தியும்பெற்ற இந்த அற்புத குணந்தங்கிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள், குணத்தால் சிறந்ததுதான் என்று இதனைப் பண்முறையும் புகழுவார்கள். இச்சிறந்த அபூர்வ லேகியத்தை உபயோகித்தால் உற்சாகமடைவீர்கள். பண்டைகாலத்தரசர்கள் தத்துவங்குறையாது வாழ்ந்திருந்தார்களென அராபி, பார்சி கதைகளிலும் தமிழ்புராணங்களிலும் வாசித்திருக்கிறோமல்லவா? அத்தகைய குணத்தை தரக்கூடிய அற்புத சஞ்சீவிகளில் இந்த ஊர்க்குருவிசத்தின் லேகியமும் ஒன்றென்பதை அனுபவத்தால் அறிந்துகொள்வீர்கள். இது எங்கள் முன்னோரின் ஏட்டுப்பிரதியிலுள்ள அனுபவமுறை.

இந்த லேகியம் அசல் பாகத்திற்கோர் விகற்பமிறின் தங்கம், வெள்ளி, செம்பு, பவழம் ஆகிய பஸ்பம், செந்தூரங்களும் அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ முதலிய எட்டுவித மிஸ்ரிகள், 10-வகை விதைகள், எழுவகை மூலிகை சூரணங்கள், ஐந்து வேர் வகைகள், மற்ற அருமையான சரக்குகள் (192-ம்) நிறையளவுகுறையாதபடி பாகஞ்செய்து வாலையந்திரத்திலிறக்கிய ஊர்க்குருவி சத்தும் சேர்த்துப் பாகமாய்ச் செய்யப்பெற்றது.

இந்த ஊர்க்குருவியின் குணத்தைப்பற்றி சிந்தாமணி என்னும் சாஸ்திரத்தில் சித்துபுருஷரின் உத்தம வாக்கியமும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பலகாலும் பலபேருக்கும் கொடுத்து யாம் கண்ட உபயோகத்தையும் சொல்லுகின்றோம்.

லேகியத்தின் குணமாவன:—வாத பித்த சிலேத்ம மிகுதிக்குறைவால் ஏற்படும் இரத்தக் குறைவு, எழுவகைத் தாதுகளின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, வீரியநஷ்டம், சதா இடுப்பு வலி, மலச்சிக்கல், பசிமந்தம், பித்தாதிக்க உஷ்ணவாய்வு, கிருமிரோகம், துர்நீர்வியாதிகள் தேகத்தில் ஓடித்திரியும் பலவகை வாய்வுரோகம், பார்சவாய்வு, நெஞ்சுவலி, விரைவாதம், கைகாலசந்தி, மறதி, மனோசக்தி நாளுக்குநாள் குறைதல் முதலியன நிவர்த்தியாகிவிடும். தேக உஷ்ணத்தை சமனப்படுத்தி இரத்தத்தை விர்த்திசெய்து புத்தி சாதுர்பத்தைக்கொடுத்து தேகத்துக்கு நல்ல பலத்தை உண்டாக்கும். இந்த லேகியத்தை பால்யர் முதல் வயோதிகர் வரையில் சாப்பிட்டால் தேகத்திற்கு நல்ல பலத்தைக்கொடுக்கும். இதை ஒருதரம் பரீக்ஷைசெய்து பார்க்கவும்.

40 நாள் சாப்பிடும் **16** பலம் டப்பி ரு. **12-0-0**	**6**-நாள் சாப்பிடும் **2** பலம் டப்பி ரு. **1 -4-0**
20 நாள் சாப்பிடும் **8** பலம் டப்பி ரு **6-8-0**	**3**-நாள் சாப்பிடும் **1** பலம் டப்பி ரு. **0-10-0**
12 நாள் சாப்பிடும் **5** பலம் டப்பி ரு **3-8-0**	வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

N.B.—டஜன் கணக்கில் வரவழைப்பவர்களுக்கு வி. பி. பார்சல் சிலவு இனமாக அனுப்பப்படும். டஜன் கணக்கில் ஆர்டர் செய்பவர்கள் ரூ 5-0-0 அட்வான்ஸ் அனுப்பி பாக்கித்துகைக்கு வி. பி. யில் பணம் கட்டி பார்சலை பெற்றுக்கொள்ளவும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரா முதலிய பிரதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜ் ரூ. 2—8—0-யும் முன் பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷை ஊரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதும்கடிதங்களை அங்கீகரிக்கப்படமாட்டாது. தங்கள் விலாசம் தெளிவாய் எழுதவும் கனவான்கள் ஒருதடவை பரீக்ஷைசெய்யவும். பலஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. தக்ககமிஷன்கொடுக்கப்படும்.

☞ எமது விலாசம்:—மானேஜர்,
எம். ஏ. மரைக்காயர் அண்டு கம்பெனி,
ஆயுர்வேத வைத்தியசாலை,
பரங்கிபேட்டை, தென்னாற்காஜில்லா (இந்தியா)

☞ எமது திட்டச்சேரி சோல் ஏஜண்டு:—
A. M. O முகம்மது யூசுபு பிரதர்ஸ்,
ஜவுளி அண்டு ஜெனரல் மேர்ச்சண்ட், கடைவீதி,
திட்டச்சேரி P. O. தஞ்சாவூர் ஜில்லா.

இந்திய வர்த்தகம்.

(Indian Trade Statistics.)

சென்னை. (Madras)

சென்னை மாகாணத்தில் செப்டம்பர் மாதத்தில் இறக்குமதி ரூ. 1,13,28,839. சென்ற வருட இதே மாதத்தில் ரூ. 1,46,07,711 எற்றுமதி ரூ. 1,92,39,919 சென்ற வருடத்தில் ரூ. 1,72,57,488.

சென்னை மாகாணத்தில் அக்டோபர் மாத வர்த்தகம்-இறக்குமதி ரூ. 1,26,00,466 (1,31,82,685) எற்றுமதி ரூ. 2,07,19,554 (2,07,39,797) காப்பி, கருப்பு, தேயிலை, பருத்தி, புகையிலை முதலான சாமான்களில் எற்றுமதி குறைவேற்பட்டிருக்கிறது.

* * *

பம்பாய். (Bombay)

பம்பாய் மாகாணத்தில் செப்டம்பர் மாத வர்த்தகம்—இறக்குமதி ரூ. 3·53 கோடி சென்ற வருடத்தைவிட 100க்கு 17 வீதம் குறைவு. எற்றுமதி ரூ. 1·71 கோடி சென்ற வருடத்தைவிட 100க்கு 11 வீதம் குறைவு.

* * *

கல்கத்தா, (Calcutta)

செப்டம்பர் மாதத்தில் கல்கத்தாவில் இறக்குமதி 3·21 கோடியிலிருந்து ரூ. 2·25 கோடிக்கு வந்திருக்கிறது. எற்றுமதி 5·95 கோடியிலிருந்து ரூ. 5·71 கோடிக்கு வந்திருக்கிறது.

செப்டம்பர் மாதத்தைவிட அக்டோபர் மாதத்தில் அபிவிருத்தி எற்பட்டிருக்கிறது. இறக்குமதி ரூ. 3·05 கோடி (2·73) எற்றுமதி ரூ. 5·71 கோடி (5·65)

* * *

கராச்சி. (Karachi)

கராச்சி துறைமுகத்தின் 32–33 வருமானம் ரூ. 59,22,000. முந்தின வருடத்தில் ரூ. 63,67,000. செலவு ரூ. 62,91,000.

கராச்சி துறைமுகத்தில் செப்டம்பர் மாதத்தில் இறக்குமதி ரூ. 1·16 கோடி. சென்ற மாதத்தைவிட 60 லட்சம் குறைவு. எற்றுமதி 59 லட்சம் ரூபாய். 20 லட்சம் குறைவு. செப்டம்பர் மாதம் முடிய ஆறு மாத வர்த்தகத்தில் இறக்குமதியில் 100க்கு 29 வீதம் குறைவு. எற்றுமதியில் 100க்கு 19 வீதம் உயர்வு.

கராச்சி துறைமுகத்தில் அக்டோபர் மாத வர்த்தகம்—இறக்குமதி ரூ. 1·33 கோடி. எற்றுமதி ரூ. 74 லட்சம். எழு மாதத்துடன் முடிவாகும் கணக்குப்படி இறக்குமதியில் 100க்கு 25 வீதம் குறைவு. எற்றுமதியில் 100க்கு 15 வீதம் உயர்வு.

* * *

பர்மா. (Burma)

பர்மாவில் செப்டம்பர் மாதத்தில் இறக்குமதியான சாமான்களின் விலை ரூ. 63·96 லட்சம். முந்தின மாதத்தில் ரூ. 77·99. எற்றுமதி ரூ. 110·92 லட்சம். சென்ற மாதம் ரூ. 154·51 லட்சம். இம்மாதத்தில் இறக்குமதி எற்றுமதிவகையில் சென்ற மாதத்தை விட 57·62 லட்சம் ரூபாய் குறைவு.

அக்டோபர் மாத வர்த்தகத்தில் பர்மாவில் எற்றுமதி இறக்குமதி வகையில் வர்த்தகம் ரூ. 201·05 லட்சம். சென்ற வருடம் ரூ. 181·01 லட்சம். அக்டோபர் மாதத்தில் 375 ரூபாய் மதிப்புள்ள நெல் எற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

* * *

ஏடன். (Aden)

எடன் துறைமுகத்தில் செப்டம்பர் மாத வர்த்தகம் — இறக்குமதி ரூ. 38,17,000 (42,06,000) எற்றுமதி ரூ. 26,08,000 (27,44,000).

எடன் துறைமுகத்தின் 32-33ம் வருடத்தின் வருமானம் ரூ. 13,32,354, செலவு ரூ. 11,53,573. இறக்குமதி சாமான்களின் கிரயம் ரூ 5,46,65,576. எற்றுமதி சாமான்களின் கிரயம் ரூ. 3,47,72,647.

* * *

ஆலப்பிழை. (Alleppy)

1933ளு செப்டம்பர் மாதத்துடன் முடிவாகும் கால் வருட வர்த்தக கணக்கின்படி ஆலப்பிழையில் வர்த்தகம் குறைவாகவே தெரிகிறது. கயிறு 39837 (68900) அந்தர், பாய் 16,79,417 (1420596) கஜம், தேயிலை 32072 (157218) பவுன், ரப்பர் 88824 (15000) பவுன். மிளகு 17650 (17266) அந்தர், கொப்பரை 31,018 (36,886) அந்தர், தேங்காய் 9,50,130 (11,60,480) மீன் 5504 (9940) அந்தர், காஷியுநட் 3935 (3978) அந்தர், ஜிர்கான் 200 அந்தர்.

ஆலப்பிழை துறைமுகத்தில் ஆகஸ்டு மாதத்தில் 23096 அந்தர் கயிறு, 1,107,459 கஜம் பாய், 4214 பவுண்டு தேயிலை, 35760 பவுண்டு ரப்பர் எற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. ரப்பர் முழுதும் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. கயிறும், தேயிலையும் சென்ற வருடத்தைவிட குறைவாகவே எற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

* * *

ஒக்கா. (Okha)

ஒக்கா துறைமுகத்தில் செப்டம்பர் மாதத்தில் இறக்குமதி ரூ. 3,27,672. அக்டோபர் மாதத்தில் ரூ. 1,98,010.

* * *

சுங்கவரி வருமானம். (Customs)

இந்தியா கவர்ன்மெண்டுக்கு 1933 வருடம் எப்ரல் மாதம் முதல் தேதியிருந்து அக்டோபர் மாதம் கடைசி வரையில் கடற் சுங்கவரியில் வருமானம் ரூ. 28,00,00,000. சென்ற வருடத்தில் இதே ஆறு மாதங்களுக்கு ரூ. 31,00,00,000. இறக்குமதியில் ரூ. 20·55 லட்சம். எற்றுமதியில் ரூ. 2·40 லட்சம். மோட்டார் ஸ்பிரிட் ரூ. 264 லட்சம். கிரோசைன் ரூ. 161 லட்சம். நிலச்சுரங்கம் ரூ. 80 லட்சம்.

* * *

1933ளு எப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து செப்டம்பர் மாதம் 30 தேதியோடு முடிவாகும் ஆறு மாதத்தில் இந்தியாவில் 55·35 கோடி ரூபாய்க்கு சாமான்கள் இறக்குமதியாகியிருக்கின்றன. ஆனால் இதே காலத்தில் 1932ம் ஆண்டில் 70·80 கோடி 1931ம் ஆண்டில் 65·88 கோடி எற்றுமதியான சாமான்களின் விலை 1933-ம் ஆண்டில் 72·68 கோடி. 1932ல் 62·20 கோடி, 1931ல் 78·02 கோடி.

* * *

இந்தியாவில் செப்டம்பர் மாதத்தில் அன்னிய நாட்டு வர்த்தகத்தின் விபரம் இறக்குமதி ரூ. 8,75,00,000. எற்றுமதி ரூ. 11,65,00,000. தங்கம் வெள்ளி ரூ. 5,68,00,000.

வியாபாரத்திற்கழகு :: விளம்பரம் செய்தல்.

வர்த்தக துணுக்குகள்.
(Trade Titbits)

லண்டன் விவசாயமந்திரி மிஸ்டர் வால்டர் வலியட் பேசுகையில் 100-க்கு 16 வீதம் பன்றி யிறைச்சி இறக்குமதி இனி குறைக்கப்பட்டுவிடுமெ என்றும் உள்நாட்டு உற்பத்தி அதிகப்படுவதால் இறக்குமதியை குறைக்காமல் முடியாதென்றும் நவம்பர் முதல் பிப்ரவரி வரையில் 6 லட்சத்து 20 ஆயிரம் பன்றிகள் இறக்குமதி செய்ய எற்கனவே ஒப்பந்தம் செய்திருந்ததாகவும் இதில் 100-க்கு 15 இனிக் குறைந்துவிடுமென்றும் சொன்னார்.

* * *

டாரண்டோ சர்வகலா சங்கத்தைச் சேர்ந்த இரண்டு ஆசிரியர்கள் சிறிது காலமாகச் செய்துவந்த பரீக்ஷைகளின் பலனாக காகித ஆலைகளிலிருந்தும் சுரங்கங்களிலிருந்தும் வீண் போய்விடும் புகையைக்கொண்டு கந்தகத்தைத் தயார் செய்யலாமென்று கண்டறிந்திருக்கிறார்கள். கானடாவில் கந்தகம் உற்பத்தி செய்யப்படவில்லை. அதனால் அது வருஷத்தில் 8 லட்சம் பவுன் பெறுமான கந்தகத்தை யுனைட்டெட் ஸ்டேட்ஸிலிருந்து தருவித்து வருகிறது. இந்த முறையைக் கையாளுவதால் கானடாவுககு வேண்டிய கந்தகத்தை உற்பத்தி செய்துகொண்டுவிடலாமென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

* * *

பிரிட்டிஷ் வியாபார போர்டின் தலைவரான திரு. ரன்சிமண் காமன்ஸ் சபையில் கூறியதாவது.—இங்கிலாந்து தன் தங்க நாணய திட்டத்தைக் கைவிட்ட பிறகு பிரெஞ்சு சர்க்கார், பிரிட்டிஷ் சாமான்களுக்கு 100-க்கு 15-வீதமாக அதிக வரி விதித்திருக்கின்றனர். பிரெஞ்சு நாணயத்திட்டம் க்ஷீணத்திருந்த சமயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பிரெஞ்சு சாமான்களுக்கு அவ்வாறொன்றும் அதிக வரி விதித்ததில்லை. மற்றும், வேறெந்த அன்னிய நாட்டுச் சாமான்கள் பேரிலும் பிரெஞ்சு சர்க்கார் அதிகவரி விதிக்காமல், பிரிட்டிஷ் சாமான்களுக்கு மாத்திரம் விதித்திருப்பது நியாயமாகாதென்றும், அதிக வரியை உடனே நீக்கிவிடவேண்டுமென்றும், அவ்வாறு நீக்காவிட்டால் பிரிட்டிஷ் எல்லைக்குள் வரும் பிரென்சு சாமான்களுக்கெல்லாம் அதிகவரி விதிக்க வேண்டிவருமென்னும் எச்சரிக்கையையும் பிரெஞ்சு சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

* * *

உங்கள் டிரேட் மார்க்குகள், பெயர்கள்; லேபில்களை,
பிறர் உபயோகித்து, உங்கள் லாபத்தை அடையாமலிருக்கும் பொருட்டு,
கல்கத்தா ரிஜிஸ்டர்
செய்து கொள்ளவும். முழுவிபரம் இனும். விலாசம்:-ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்சி
9, சுண்ணும்புக்காரத் தெருவு, பூக்குளத்திற்கு எதிரில், திருச்சினப்பள்ளி.

கடிதங்கள்.
(Letter to the Editor)

சென்னை கொழும்பு.

ஆகாயத் தபால்.

சென்னைக்கும் கொழும்புக்கும் ஆகாயத்தபால் போக்குவரத்துக்குரிய ஏற்பாடுகள் கூடிய விரைவில் முடிவடையும் என்று தெரிகிறது. நாகரீகம் முதிர்ந்த இந்நாளில் இது மிக்க அவசியமே. இதனை எல்லோரும் வரவேற்கின்றனர். ஆகாய விமானமானது சென்னையைவிட்டு புறப்பட்டதும் இடம் வேண்டுவதசியம். இதற்குரியது செட்டிநாட்டிலுள்ள ஏரோடிரோமே யாகும். இது ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களால் ஏராளமான பொருட்செலவில் அமைக்கப்பெற்றுள்ளது; பரந்த நிலப்பரப்பும் விஸ்தீரணமும் உடையது. இதனுடன் பிரயாணிகள் தங்குவதற்கென்றே ஒரு (Rest-house) இளைப்பாரும் விடுதி ஒன்று கட்டப்பட்டுளது. ஆதலின் சர்க்கார் அவர்கள் செட்டிநாட்டு ஏரோடிரோமேயே சென்னைக்கும் கொழும்புக்கும் இடையில் தங்குமிடமாகக் கொள்ளுவார்களென்று நம்புகிறோம்.

(ஒரு நிருபர்)

8 அணுவுக்கு 12 புஸ்தகம்.

வர்த்தக ஊழியன் மானேஜருக்கு அணா எட்டு அனுப்பினால் வர்த்தக ஊழியன் முந்தின பிரதிகள் 12 அனுப்பப்படும். உடனே எழுதவும்.

மான்செஸ்டரில் செய்ததாக பொய் குறியிடப்பட்டிருந்த பெருவாரியான ஜப்பான் பருத்தி ஜவுளிகளை எகிப்து தேச துறைமுக அதிகாரிகள் கெயிரோவில் கைப்பற்றி இருப்பதாக தெரிகிறது

* * *

இந்தியாவில் விளையும் காப்பிக்கொட்டைகளை மேல்நாடுகளில் பிரான்சு தேசம்தான் அதிகமாக வாங்குகிறது. சென்றவருடத்தில் முந்தின வருடத்தை விட 100-க்கு 30 பங்கு அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது.

* * *

தமிழ் அன்பர் மகாநாடு
தமிழ்ப் புத்தகக்காட்சிச்சாலை

தமிழ் அன்பர் மகாநாடு வரும் டிசெம்பர்மீ 23, 24-தேதிகளில், சென்னை பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் கூடுகிறது. அப்போது தமிழ்ப் புத்தகங்களும் பத்திரிகைகளும் கொண்ட காட்சிச் சாலை யொன்று நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அது டிசெம்பர்மீ 21-உ காலை திறந்து 26-ம் உ மாலை மூடும். சென்னை கல்வி இலாகாத் தலைவர் மிஸ்டர் எர்லம் ஸ்மித் அவர்கள் எம். ஏ. ஐ. இ. எஸ்., காட்சிச் சாலையைத் திறந்து வைப்பார்கள். அச்சமயம் மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்கள், பி. ஸி., சி. எச்., தலைமை வகிப்பார்கள்.

ஆசிரியர், பிரசுரகர்த்தர், வியாபாரிகள் ஆகிய யாவரும் தம் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் காட்சிச் சாலையில் வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கோரப்படுகின்றது. தாங்களே சொந்தத்தில் ஏற்பாடுசெய்து கொள்ள முடியாதவர்களுக்கு மகாநாட்டின் நிர்வாகிகளால் வேண்டிய உதவி செய்து கொடுக்கப்படும். அப்படிப்பட்டவர்கள் மகாநாட்டின் காரியாலயத்திற்கு நேரில் தங்கள் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் டிசெம்பர்மீ 10-ம்உக்குள் அனுப்பவேண்டும். அவைகளைப் பாதுகாத்துக் காட்சி முடிந்தவுடன் அவரவர் செலவில் புத்தகங்களைத் திருப்பி அனுப்பவும் வேண்டிய ஏற்பாடுதள் செய்யப்படும். காட்சிச் சாலையில் புத்தகங்களை விற்பனை செய்ய வேண்டிய உதவிகள் கூடியவரை அளிக்கப்படும்.

இதற்காக வாடகையாவது வேறு கட்டணமாவது வசூல் செய்யப்படமாட்டாது.

இக்காட்சியில் சேர விரும்புவோர் யாவரும் டிசெம்பர்மீ 10-உக்குள் மகாநாட்டின் காரியாலயத்திற்குத் தெரிவித்துத் தம் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வர்த்தகக்குறி வழக்கு.

(Infringement of Trade Mark.)

தூத்துக்குடி சப் மாஜிஸ்திரேட் திரு சங்கர பணிக்கர் முன்பாக மதுரை மெஸர்ஸ் நடராஜ தர்மாவலி அண்டு கம்பெனியின் பங்காளிகளில் ஒருவரான திரு ரஞ்ஜர்தாவலின் குமாரர், திரு தர்மாவலியின் மூலம் இங்கு பெரிய காட்டன் பஜார் பலசரக்கு மளிகை வியாபாரியான திரு எ. டீ. கல்யாணசுந்தர நாடார்மீது இ. பி. கோ. 482, 486 பிரிவுகளின்படியும் 1889-ம் வருஷத்து இந்திய வியாபார டிரேட் மார்க் ஆக்ட் 5,6,7 பிரிவுகளின்படியும் (13-11-33) ஓர் கிரிமினல் வழக்குத் கொடுத்திருக்கிறார்.

வழக்கின் சாராம்ஸமாவது:--வாதியானவர் மதுரை கீழமாசி வீதி மெஸர்ஸ் நடராஜ தர்மாவலி அண்டு கம்பெனியின் பங்காளிகளில் ஒருவராவரென்றும், மேற்படி கம்பெனியார் பம்பாய், கோகிநூர் ஹிங்கம்பெனியாரிடமிருந்துபீரங்கி மார்க்போட்ட பெருங்காயத்தை இறக்குமதி செய்ய உரிமைபட்டவர்களென்றும் மேற்படி கோஹிநூர் ஹிங்கம்பெனியார்களே மேற்படி "பீரங்கி" டிரேட் மார்க் பெருங்காயச்சொந்தக்காரரும் சோல் புரோப்ரைட்டருமாவார்களென்றும் கடந்த ஒரு மாத காலமாக மேற்படி எதிரியானவர் வாதியின் கம்பெனியில் உள்ள பெருங்காய டின்களைப்போல் அதைப்போன்ற கனஇனமுள்ளதும் போலி (கள்ள) டிரேட் மார்க் உள்ளதுமான லேபில்களையுடைய பெருங்காய டின்களை அபரிதமாகச் சேகரித்துவைத்து தூத்துக்குடியில் வியாபாரம் செய்துவருகிறதாகவும் எதிரியின் செய்கைகளானது மிக மோசகரமாகவும், இந்திய வியாபார டிரேட் மார்க் சட்டம் 5,6,7-பிரிவுகளின்படியும் இ. பி. கோ. 482, 486 பிரிவுகளின்படியும் குற்றமாகிறது 21-11-33-ல் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதில், உபய கக்ஷிக்காரர்கள், இருவரும் பிரபல வியாபாரிகளாக இருக்கிறபடியால், ஒருவருக்கொருவர், வியாபாரபோட்டி ஏற்பட்டு வியாபாரம் பாதிக்கப்படுமாகையால், உபயகக்ஷிக்காரர்களும், ஓர்வித நிபந்தனையின்பேரில், வழக்கை மேல்நடத்த வேண்டாமென்று முடிவு செய்துகொண்டபடியால்; வாதி தன் வழக்கை வாபீஸ் வாங்கிக்கொண்டார்.

வெளி வந்துவிட்டது! முந்துங்கள் வெளி வந்துவிட்டது!!

வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

1934-ம் வருஷ காலண்டர்.

சித்திர வேலைப்பாடமைந்த கட்டிங்ஸ் டிசைன்களில் பலவிதமான அழகான தினுசுகளில் தினசரி சிலிப்போடு தமிழ், இங்கிலீஷ், தெலுக்கு, தேதிகளுடனும், திதி நக்ஷத்திரங்களுடனும் தயாராகிவிட்டது. தேவையுள்ளவர்கள் நேரில் பார்த்து பிரியத்துக்குத் தக்கவாறு ஆர்டர் செய்யலாம். மாத சிலிப்புகளும் கிடைக்கும்.

மானேஜர்.

ஸ்ரீ நிலையம் அச்சியந்திரசாலை,

447, பெரியகடைவீதி, திருச்சினுப்பள்ளி.

கப்பல் செய்தி.
(Shipping News.)

சென்னை துறை முகத்தில் டிசம்பர் மாதத்தில் எதிர் பார்க்கப்படும் கப்பல்களும் தேதிகளும்.

கிளான்மதீசன் 1, ராஜுலா, மாகூத் 2, ஜலன்மோகன் 4, மணிலா 5, ஹாக்கர்க் 8, வின்ஸ்ட்ரா, கோம்பீனி 9, கத்தியவார் 10, கார்டிலோசா 11, சிடி ஆப்பர்த் 13, கிளான் மக்னீல், பெல்மோரா 15, ஸ்பேபாங், யோமகிகி, ரோஹனு; மார்கஹார் 16, மரின்சனூடே 17, மல்போரா 19, அன்னம் 21 டூரியன் பெல்சு 23, விகாந்தடிலேல், சிடி ஆப் பிளாரன்சு 26, சிலோன், சோண்டா இன்டன் 28, கிளான்மசிண்டோ 29, மாஹாட் 30

சுத்த தங்கம்.

விலை அதிகம். பாரிஸ் தங்கத்தை வாங்கி லாபமடையுங்கள். விலை மிகசகாயம் ஒரு அவுன்ஸ் ரூ. 6-0-0. இரண்டு அவுன்ஸ் (5-தோலா) ரூ. 10. 2½ ரூபாய் அனுப்பி மாதிரி வாங்கிப்பார்த்து பின் அதிகம் வாங்கவும். விலாசம்:—

அவுஸ் ஆப் காமர்ஸ், கௌகத்தி.

5 ரூபாய் இனாம்.

நவம்பர் மாத அதிர்ஷ்ட நெம்பர் 4010. டிசம்பர் மாதம் 31உக்குள் பரிசுபெற்ற நம்பருள்ள பக்கத்தை மானேஜருக்கு அனுப்பினால் ரூபாய் ஐந்து அனுப்பப்படும்.

மானேஜர்.
"வர்த்தக ஊழியன்"

"வர்த்தக ஊழியன்"
(முதல் வருட புத்தகம்)

வர்த்தக ஊழியன் முதல் வருட 12 இதழ்களும் சேர்ந்து பைண்டு செய்து புஸ்தகரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. வேண்டுபவர்கள் ஒரு ரூபாயும் போஸ்டேஜ் சார்ஜ் அணா நான்கு மானேஜருக்கு அனுப்பினால் பைண்டு செய்த புஸ்தகம் அனுப்பப்படும். சொற்ப காப்பிகளே பைண்டு செய்திருப்பதால் உடனே எழுதி தருவித்துக் கொள்ளலாம்.

அறிவிப்பு.

வர்த்தகம், கைத்தொழில் முதலானவைகளைப்பற்றி வியாசங்கள் பத்திராதிபருக்கு எழுதியனுப்பினால் பிரசுரிக்கப்படும். நல்ல வியாசங்களுக்கு தகுந்தாப்போல் சன்மானம் கொடுக்கப்படும். வர்த்தக ஊழியன் ஒரு பக்கத்திற்குள் அடங்கும்படியாக எழுதியனுப்ப வேண்டும்.

வர்த்தகஊழியன் கிடைக்குமிடம்.

ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹிக்கின்பாதம், சுதேசமித்திரன் புஸ்தகசாலைகளிலும், சேலம், தஞ்சாவூர், திருவாரூர், விருதுநகர், காரைக்குடி, பொள்ளாச்சி, கரூர், ஈரோடு, திருப்பூர் முதலான இடங்களிலிருக்கும் "தமிழ்நாடு" கடைகளிலும் 'வர்த்தக ஊழியன்' கிடைக்கும்.

மானேஜர்.

அரிசிக்கு கட்டணம் குறைக்க.

தஞ்சை—தென்னாற்காடு ஆலைச் சொந்தக்காரர்களின் சங்கக் காரியதரிசியான திரு. கே. ராமஸ்வாமி அய்யரும், திருவாளர்கள் வெங்கட்ராமய்யர், (சங்கத் தலைவர்) ஏ. கே. எம். மார்க்கண்டம் பிள்ளை, சீயாழி பொன்னையாக்கோனார் முதலியவர்கள் கொண்ட ஒரு தூது கோஷ்டியார் ரயில்வேசீப் கமர்ஷியல் சூப்பிரன்டெண்டான மிஸ்டர் மில்லரை பேட்டி கண்டு ஆலைச் சொந்தக்காரர்களுக்கு இருந்துவரும் கஷ்டங்களை சாங்கோபாங்கமாக எடுத்துக் கூறினர்.

தூது கோஷ்டியார்கள் அரிசி ஏற்றுமதிவிஷயத்தில் ரயில்வேக் கட்டணங்களைக் குறைக்க வேண்டுமென்றும், திரு மில்லர் கூடிய சீக்கிரம் தான் கொழும்பிற்குப் போகப்போவதாயும், அங்கு ரயில்வே அதிகாரிகளுடன் கலந்து பேசி ரயில்வேக் கட்டணங்களை குறைக்கவேண்டிய வழிகளையும், ஏற்பாடுகளையும் செய்துவைப்பதாயும் தென்னிந்தியா ரயில்வே சம்பந்தப்பட்டவரையில் தான் கட்டணங்களைக் குறைத்து தக்கது செய்யத்தயாராகயிருப்பதாகவும், தூதுகோஷ்டியர்சிலோனுக்குச் சென்று அங்கு ரயில்வே அதிகாரிகளிடம் முறையிட்டு தக்கது செய்யக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் கட்டணக் கமிட்டி முன்பாக ஒத்துக்கொண்ட பிரகாரம் ஏற்றுமதி விஷயத்தில் உள்நாட்டு விகிதங்களைக் குறைக்கும் விஷயமானது ஆலோசனைக்கு விடப்பட்டு யோசிக்கப்பட்டு வருகிறதாயும், சீக்கிரத்தில் அது பற்றிய முடிவுகள் கூறப்படும் என்றும் தெரிவித்தார். தூதுக்கோஷ்டியார் தங்களுடையவேலைக்காரர்களுக்கு 1910-11 வருஷத்தில் ரயில்வே கம்பெனியார் கொடுத்திருந்த பிரகாரம் ஸீஸன் டிக்கட்டுகளை சகாயமாகக் கொடுக்கவேண்டுமென்று கோறுவதாகவும், ஆனால் அதற்கு சூப்பிரண்டென்டு ஆலைச் சொந்தக்காரர்களின் வேலையாட்களுக்கு ஷை ஸீஸன் டிக்கட்டுகள் கொடுக்க முடியாதென்றும், ஆனால் ஆலைச்சொந்தக்காரர்களின் சங்கத்தின் வேலையாட்களுக்கு மட்டில் ஸீஸன் டிக்கட்டுகளைக் கொடுப்பதாயும், அப்படிக் கொடுக்கும் விஷயமும் ரயில்வே ஏஜண்டுடன் கலந்து பேசிய பின்னரே தான் கொடுக்கமுடியும் என்று கூறினார். தூது சென்றவர்கள் தஞ்சை-தென்னார்காடு ஜில்லாவினின்று உள்நாட்டுக்கு அனுப்பப்படும் அரிசிக்கு இன்னும் அதிகமாகக் கட்டண விகிதத்தைக் குறைக்கவேண்டுமென்றும் கேட்டதற்கு, சூப்பிரன்டெண்டு பொள்ளாச்சி, கள்ளிக்கோட்டை, திருச்செந்தூர், கொல்லம் முதலிய இடங்களிலுள்ள வியாபாரிகளுடன் ஒத்துழைத்து பர்மாவிலிருந்து இறக்குமதியாகும் அரிசியுடன் போட்டியாக ஏற்றுமதி செய்யும் பக்ஷத்தில் அவ்வூர்களுக்கு விகிதங்களைக் குறைக்க ஏற்பாடு செய்வதாகச் சொல்லியதாகவும விருதுபட்டி, கோயில்பட்டி, சாத்தூர் முதலிய ஊர்களுக்குக்கூட ஏற்றுமதிகள் செய்வதற்கும் வசதியளிப்பதாகவும் உறுதி கூறினாராம்.

இலங்கைக்கு அரிசி ஏற்றுமதி செய்யத்தக்க வசதிகளை செய்துகொடுத்தால், தாங்கள் ஏற்றுமதிகளை ரயில்வே மூலமாக இலங்கைக்கு அனுப்புவதாக கூறி வந்தனத்துடன் திரும்பினார்கள்.

நாணய மாற்றம்.

Currency (30—11—33)

	பென்சு
பாங்ரேட் லண்டன் தந்தி	17 25/32
பாங்ரேட்லண்டன்தரிசனம்	17 25/32
லண்டன் தந்தி விற்கிறவிலை	17 27/32
தரிசன உண்டி விற்கிறவிலை	17 27/32

லண்டன்—அமெரிக்கா மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு டாலர் 5·20

பாரிஸ் லண்டன் மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு பிராங்கு 84·59

பிரான்ஸ் மேல் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு பிராங்கு 590.

ஜர்மன் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு மார்க்கு 93.

அமெரிக்கா தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 302.

அமெரிக்கா தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 287.

சிங்கப்பூர் தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 158½.

சிங்கப்பூர் தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 150.

ஹாங்காங் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 99

ஷாங்காய் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 92

ஜப்பான் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை என் 100-க்கு ரூ. 85.

ஜப்பான் 2-மாததவணை உணடி வாங்குவது என் 100-க்கு ரூ. 100.

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை ரூ. 100-ச்கு கில்டர் 58.

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி வாங்குவது ரூ. 100-க்கு கில்டர் 100.

பத்திரிகைகளின் வரவு.

(Exchange Journals.)

Mysore Chamber of Commerce Bullettin.

Bombay Indian Merchants' Chamber Journal.

The Book Circle
Indian Finance
Industry
Guardian
Light of Asia
Indian Mirror
தேச நேசன்
நகர தூதன்
குமரன்
குடி அரசு
குமார விகடன்
விநோதன்
வாசவி
செங்குந்தமித்ரன்
சுதந்தர வீரன்
இந்தியதாய்
பாரதஜோதி
அறிவுவிளக்கம்
செந்தமிழ் மலர்
பர்மா நாடு
திருக்குறட் குமரேச வெண்பா
இந்திய விவசாயம்
வணிக தூதன்
ஒற்றுமை
பாலவிநோதினி

ஏஜண்டுகள் தேவை.

"வர்த்தக ஊழியன்" பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், விற்கவும், விளம்பரங்கள் சேகரிக்கவும் செல்வாக்குள்ள ஏஜண்டுகள் முக்கிய பட்டணங்களில் தேவை.

மானேஜர் "வர்த்தக ஊழியன்"
திருச்சினாப்பள்ளி.

ரூபாயின் பரிவர்த்தனை விகிதம்.

ஸ்டர்லிங்-ரூபாய் பரிவர்த்தனை விகிதத்தைக் குறித்து கர்னல் வெட்ஜ்வுட் காமன்ஸ் சபையில் கேட்ட கேள்விக்கு இந்தியா மந்திரி பதிலளித்தபோது கவர்ன்மெண்டின் கொள்கையில் யாதொரு மாறுதலு மில்லையென்றும், 1927-ம் வருஷத்தில் இந்திய நாணய செலாவணிச் சட்டம் செய்தது முதல் இருந்துவரும் விகிதப்படியே ஸ்டர்லிங்குடன் ரூபாயைப் பிணைத்திருக்க உத்தேசமென்றும் தெரிவித்தார்.

TRADE MARK CAUTION.

Notice is hereby given that Mr. P. K. ABDUL RAHIMAN ROWTHER, Maligai & Cigar Merchant, Panruti, is the owner and sole proprietor of the following Trade Mark :—

"MOTOR MARK CIGARS" (Regd. No. 3209 of 1933.)

The said Trade Mark is used in respect of the description of goods following that is to say :— "TOBACCO & CIGARS"

Any imitation or fraudulent use of the said Trade Mark will be dealt with according to law.

REGISTRATION AGENCY, Patent & Trade Mark Agents,
9. Chunnambukara St., Trichinopoly.

நீங்கள் அறிவீர்களா?

சென்ற 53 வருஷங்களாக இந்தியா, பர்மா, சிலோன், ஸ்டெரெயிட் செட்டில்மெண்ட், ஆப்ரிக்கா முதலிய நாடுகளில் இலட்சக்கணக்கான ஜனங்களுக்கு குணமென்னும் பாக்கியத்தைக் கொடுக்கும் பலவிருத்தி ஔஷதம்

— எங்களுடைய —

ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களென்று நீங்கள் அறிவீர்களா? மலச்சிக்கல், பசியின்மை, தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, முதலிய வியாதிகளை காஸ்தமாகக் கண்டித்து தேகத்தை வஜ்ர சரீரமாக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1

இனும்! இனும்!!

"இன்பவாழ்க்கையிலடைந்த சக்தி"

கேட்போருக்கு இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26. பிராட்வே, மதராஸ்.

ஏஜண்டு:—T. G. கோபால் பிள்ளை,
மலைவாசல், தெப்பக்குளம், திருச்சி.

வர்த்தக நண்பர்களே!

உங்கள்

வர்த்தகம்
விருத்தியடைந்து
நீங்கள் லாபமடைய
விரும்பினால்
"வர்த்தக ஊழியனில்"

விளம்பரம் செய்யுங்கள்.

வர்த்தக குறிவழக்கு (தொடர்ச்சி.)

திருநெல்வேலி, மதுரை, திண்டுக்கல் முதலிய இடங்களில் சோடாவாட்டர் கம்பெனி வைத்திருக்கும் வின்சென்ட் கம்பெனியார், கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்த திரு. கந்தசாமி பிள்ளை அண்டு கோ மீது அம்பாசமுத்திரம் முனிசீப் கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியத்தைக்கொடுத்தார்கள். பிரதிவாதிகள் தங்கள் கடைக்கு 'நெல்சண்டு அண்டு கோ' என்று பெயர் வைத்திருப்பதும், தங்களுடைய ஒரு பாணத்திற்கு வாதிகளின் பாணத்தின் பெயராகிய 'வின்சல்லா' என்று பெயர் கொடுத்திருப்பதும், சோடாவாட்டர் பாட்டில்கள் மீது வாதி கம்பெனியார் உபயோகிக்கும் லேபில்கள்போன்ற லேபில்கள் ஒட்டியிருப்பதும், வாதியின் வியாபார உரிமைகளைப் பாதிக்கக் கூடியதாயிருக்கிறதென்று சொல்லி, பிரதிவாதிகள் அப்படி செய்யாமலிருக்கும்படி ஒரு தடை உத்தரவை வாதி கோரினார். அம்பாசமுத்திரம் ஜில்லா முனிசீப் தாற்காலிகத் தடையுத்தரவை பிரதிவாதிகள் மீது பிறப்பித்தார். அவர் 'நெல்சென்டு கம்பெனி' யென்றபெயரில் வியாபாரம் செய்யக்கூடாதென்றும், 'வின்சல்லா' என்ற பெயரை யெடுத்துவிட வேண்டுமென்றும், வின்செண்டு கம்பெனியின் லேபில்களைப் போன்ற லேபில்களை உபயோகிக்கக் கூடாதென்றும் தடையுத்தரவு பிறப்பித்தார். இதன்மேல் பிரதிவாதி கந்தசாமிபிள்ளை கம்பெனியார் திருநெல்வேலிஜில்லாக் கோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர்மாக் கீழ்க்கோர்ட்டார் சரியாய்த்தான் தடையுத்தரவு பிறப்பித்திருக்கிறாரென்று சொல்லி, அதை ஊர்ஜிதம் செய்து அப்பீலைத் தள்ளுபடி செய்தார்.

ஸ்தம்பன வடி (Registered)

(தாதுவிருத்தி மாத்திரை)

இது அநேக வருஷங்களாக அனுபவித்த ஓர் அபூர்வ மருந்து. தாது நஷ்டம், நரம்புத் தளர்ச்சி, தேகசூடு, அஸ்திச்சூடு, மூளை தூர்பலம், அஜீர்ணம், ஞாபகமின்மை, வெட்டை, முதுகு எலும்பு முதலியவற்றின் நோய், மனோசக்திக்குறைவு, முகவெளுப்பு கை கால்களின் எரிச்சல், ஆயாசம், தேக நடுக்கம், நெஞ்சு திடுக்கம், அதைரியம், சோம்பல், அற்ப வேலைக்கு பெருமூச்சு விடுதல் ஆகிய அநேக ரோகங்களைத் தீர்த்து இரத்தத்தை விருத்திசெய்யும். நரம்புகளைப் பலப்படுத்தும். தேகபுஷ்டியை உண்டாக்கும் இதில் லாகிரி வஸ்துக்கள் இல்லை.

25 மாத்திரைகள் சீசா ரூபா 2

டாக்டர் கோட்டாஸ் எம். எஸ்

மெடிகல் ஹால்,

நெ. **146** பிராட்வே, மதராஸ்.

WANTED—Agents and Salesmen to sell our renowned Dr. Kotah's Herbal Glycerine and Hazel Snow, Family Medicine Chests, Sthambhana Vati, Sanjeevi Mattra, Chyavanaprash, Raja Rasam etc., on liberal commission.

Apply to:-Dr. Kotah's M. S. Medical Hall. 146, Broadway, Madras.

குளிர்காலம்.

உல்லன் குல்லாய்கள் ஸ்டாக்கிங்குகள், மங்கியாப் வகையறுக்களும்,

பிளேஜர், சர்ஜ், டுவிட் முதலிய கோட்டிங் தினுசுகளும் மிகவும் நயமாய் கிடைக்கும்.

ஜானகிராம் கம்பெனி,

காரைக்குடி.

T. N. S. NAIDU,

Proprietor.

Grand Clearance Sale

5 Watches for Rs. 4 only

One German Timepiece
Two Dummy Pocket Watches
Two Dummy Wrist Watches

To clear our large stock of watches, we have decided to sell them in lots of "Five watches for Rs. 4 only." In durability our watches are a class in themselves. The Clearance Sale will continue only for a limited period, and thereafter the watchas will be sold at their usual prices. Order for less than a lot of five watches will not be entertained. Postage As. 8 extra.

Golden Opportunity—Order To-day

Manager :—

THE GERMAN WATCH Co.,
Post Box No. 56, LAHORE.

(Matter No. A. C.)

BIRTH CONTROLLER

Those who consider fecundity beyond human control may use our medicine to get rid of this belief. What was considered at one time to be outside the domain of science is now accomplished fact and you can now regulate pregnancy just as you regulate youı daily work.

Taken during the menses, the medicine acts as a preventive for the month and thus pregnancy may be postponed indefinitely by using the medicine during each course. The effect of the medicine is such that pregnancy is seemed by stopping its use, so that it does not produce sterility, nor is its use harmful to the health of the body.

The use of our medicine does not preclude co-habitation and it may be used at all stages of life, giving best results all the while. It is a very effective and infallible preventive.

Price—Medicine to last for 6 months Re. 1—12 only ; for 12 months Rs. 2—8 only.

Postage Extra

THE ANGLO-AYURVEDIC HOME.
170, MANIKTOLLA STREET,
CALCUTTA.

LOVE LORNS

Despaired from all sides should use our "Gohar Murad" Talisman for the last time to achieve their object. Keep it with you and think of the beloved who will at once become passionate and will try to be with you within the shortest possible time, despite being cruel minded or staying at a far off place, and moreover will never seek separation. This Talisman contains in itself the special qualities such as to win the favour of officials or masters and to gain victory on enemy. This is a sure and certain Talisman. Remuneration Re. 1 only. Postage extra. Correct answers to any five questions for Re. 1—4—0 only.

Note.—Rupees one hundred as prize shall be awarded to any one proving it inaccurate.

Manager :—

The Parkash Jotish Ashram.
Post Box No. 72, Lahore.

(Matter No. A. M.)

T. R. RANGASAWMY NAIDU,

PAINT & GLASS MERCHANT,

341 & 342, Big Bazaar Street, TRICHINOPOLY.

All sorts of Paints, Varnishes, Colours, Enamels, etc., manufactured by well known firms & British and other make

Looking glasses, Ceiling glasses, Colour glasses and Ornamental glasses etc.

Raja Ravi Varma pictures, British & German lady pictures, sceneries, Postcard pictures, frames, Tin Plates etc.

Straw boards, Colour papers, Glass beads, Gold & Silver leaves, Copper foils, etc., for ornamenting Pandals.

Can be had at cheap rates.

Christmas Cards, New Year Calendars are available

If you want

LIGHT LAUGHTER And WIT WISDOM

Then Buy

THE LIGHT OF ASIA.

(An illustrated cultural monthly)

Teppakulam P. O. Trichinopoly.

N.B. This journal has a wide circulation throughout India and reaches people of all sorts. Hence it is the best medium of advertisement.

TRADE MARK CAUTION.

Notice is hereby given that Dr. PILLA PAPIAH PATRUDU, Mokhasadar of Bhimandorapalem, Spleen & Liver Enlargement Specialist, Pr›prietor, Sri Satyananda Ayurvedic Dispensary, Dowlaishwaram, East Godavari is the owner and sole proprietor of the following Trade Mark :-

1. "BALASANJEEVINI" (Name)

& 2. "BALAKRISHNA" (Trade Mark)

The said Trade Mark is used in respect of the description of goods following that is to say:- "MEDICINES for CHILDREN" (Regd. No. 1106 of 1933)

Any imitation or fradulent use of the said Trade Mark will be dealt with according to law.

REGISTRATION AGENCY,
Patent & Trade Mark Agents,
9, Chunnambukara St., Trichinopoly.

ஆபரணக்கற்களில் பெயர்பெற்றவை எங்கள்

ஒரிஜினல் ரங்கூன் டைமண்ட்ஸ்.

ஒரிஜினல் ரங்கூன் வைரங்கள்.

(Registered Trade Name)

Registered Trade Mark.

எல்லா நகைகளுக்கும் உபயோகமானவை

உண்மை வைரங்களைப்போல் பட்டையுள்ளதும் ரவுண்டு சுத்தமுள்ளதும், பிரகாசிப்பதும், வெண்மையுள்ளதும், காந்தி வீசுவதும், தேய்வு ஏற்படாததும், எல்லாவிதத்திலும் வைரத்தை ஒத்திருப்பதும் எங்கள் ரிஜிஸ்டர்டு "ஒரிஜினல் ரெங்கூன் வைரங்களே"

ஏழைகள் முதல் தனவந்தர்கள் வரையில் வாங்கலாம். ஒருதரம் வரவழைத்து உண்மையை அறியுங்கள். உத்திரவாதம் உள்ளவை. மாதிரி கமலத்திற்கு எழுதுங்கள், பிடிக்காவிட்டால் ரூபாய் வாபஸ் அனுப்புகிறோம்.

இமிடேஷன் பட்டை சிகப்பு, குச்சை சிகப்பு, தளுக்குப் படிக்கம், கெமிசல் டையமன் இன்னும் பலவித நூதன கற்களும், நகைகளும் நயமாய்க் கிடைக்கும்.

S. அருணாசலம் செட்டி, M. ராமசாமி செட்டி,

ஷராப் வியாபாரம், பேரியகடைவீதி, திருச்சினாப்பள்ளி.

ரோஸ்மார்க். ரிஜிஸ்டர். டிரேட் மார்க். ராஜ ரஸம்.

"ராஜ ரஸம்"

(ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

எல்லா வியாதிகளுக்கும் இணையற்ற மருந்து.

ROSE MARK REGISTERED. TRADE MARK. RAHJA_RASAM

சூதக வயிற்றுவலி சுகப்பட்டது.

"× × × தங்கள் ரசம் எவ்விதத்திலும் மின்சார ரசத்தின் குணத்தில் குறைந்ததல்ல என்பது என் அநுபவமாகும். சிறப்பாகத் தலைவலி, தேள்கடி, மாதவிடாயின்போது ஏற்படும் வயிற்றுவலி முதலிய நோய்களுக்கு இணையற்றது என்று தங்கள் "ராஜ ரச"த்திற்கு நற்சாக்ஷியளிக்க விழைகின்றேன்."

M. V. துரைசாமி உடையார்,

பிரசிடெண்டு, பஞ்சாயத்து போர்டு & எடிடர், "தெய்வீகன்"

& ஜில்லா போர்டு மெம்பர்.

குறிப்பு:—இம்மாதிரி நற்சாக்ஷிப் பத்திரங்கள் குவிந்துகொண்டிருக்கின்றன. பார்க்க விரும்புவோர் அரையணா ஸ்டாம்பு அனுப்பவும்.

1 பாட்டில் விலை ரூ. **1—8—0.** தபால் சார்ஜ் ரூ. **0—6—0.**

மாதிரி ½ பாட்டில் விலை ரூ. **0–14—0.** தபால் சார்ஜ் ரூ. **0—6—0.**

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

உற்பத்தி செய்பவர்கள்.—"ராஜ ரஸம்" கம்பெனி,

பொன்மலை S I.

திருச்சி ஏஜண்டு,

இ. முத்தையா கம்பெனி, புக்ஷாப், மலைவாசல், திருச்சி.

1933-34 ஆம் கிறிஸ்துமஸ் புதுவருட விடுமுறை நாட்கள்.

சௌகர்யமாகவும் மலிவாகவும் பிரயாணம் செய்யத் தவருதீர்கள்

கிறிஸ்துமஸ், புதுவருட விடுமுறை நாட்களில் முதல் வகுப்பில் பிரயாணம் செய்யவும். இவ்வருடம் மிகவும் குறைந்த சார்ஜை முதல் வகுப்புக்கு ஏற்படுத்தியிருக்கிறது. 100 மைல்களுக்கு மேற்பட்டு எந்த வண்டியில் பிரயாணம் செய்தாலும் குறைந்த சார்ஜில் $1\frac{1}{3}$ வீதம் ரிட்டர்ன் டிக்கட்டுகள் கிறிஸ்துமசுக்காக விற்கப்படும். உதாரணமாக :—

மைல்களுக்கு		போய்வர எக்ஸ்பிரஸ் சார்ஜ் அக்டோபர் மாதம் முதல் தேதிக்குமுன்		இந்த வருடம் கிறிஸ்துமசுக்காக	
		ரூ.	அ.	ரூ.	அ.
150 மைல் தூரத்திற்கு	....	37	8	18	12
200 ,,	....	46	14	24	0
300 ,,	....	65	10	34	7
400 ,,	....	84	6	44	14

இரண்டாம் வகுப்பில் 100மைல்களுக்குமேல் எந்த வண்டியிலும் பிரயாணம் செய்ய $1\frac{1}{3}$ வீதம் ரிட்டர்ன் டிக்கட்.

மூன்றும் வகுப்பில் 100 மைல்களுக்குமேல் பிரயாணம் செய்ய சாதாரண சார்ஜில் $1\frac{3}{4}$ வீதம் ரிட்டர்ன் டிக்கட். இந்த டிக்கட் உள்ளவர்கள் இண்டோ சிலோன், தூத்துக்குடி, புளூமவுண்டன் எக்ஸ்பிரஸ் வண்டிகள் நீங்கலாக மற்ற எல்லா வண்டிகளிலும் பிரயாணம் செய்யலாம்.

இந்த மலிவான டிக்கட்டுகள் 1933 ஆம் டிசம்பர் மாதம் 14-உயிலிருந்து 31-உ வரையில் அமுலிலிருக்கும். 1934-ஆம் ஜனவரி-மீ 15-தேதி நடுராத்திரிக்குள் திரும்பிவிட வேண்டும்.

ஷோரனூர் நிலாம்பூர், நீலகிரி ரயில் வேக்களில் மலிவான டிக்கட்டுகள் செல்லாது.

மற்ற விபரங்களுக்கு ஸ்டேஷனில் ஒட்டப்பட்டிருக்கும் விளம்பரங்களை பார்க்கவும்.

தென்னிந்தியரயில்வே கம்பெனி லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

Printed at the Sri Nilayam Press, Trichinopoly. Edited and published by T. V. K. Naidu at the office of "Varthaga Oolian" S. V. S. Building, Big Bazaar St, Trichinopoly.